CLARIFICATION ISSUED BY THE GOVERNMENT ON THE APPLICABILITY OF G.O.Ms.No.174, HOUSING & URBAN DEVELOPMENT DEPARTMENT DATED 07-02-1991.

The Government in G.O. Ms.No.466 Housing & Urban Development Department, dated 25-04-1995 (copy annexed) have issued orders that the orders issued in G.O.Ms.No.174, Housing and Urban Development Department dated 07-02-1991 shall be applicable only to the allottee who are the Tamil Nadu State Government servants and it is not applicable to either Central Government servants or the Board, Corporation or Local Body employee.

Verified RealEstate

TAMIL NADU HOUSING BOARD

Circular Memo No.R3/17318/94 Dated: 18.6.95

Sub: Housing-Tamil Nadu Housing Board-Purchase of ready built houses/flat from the TNEB by the Govt. Servants-Payment of interest by the Govt. Servants at prevailing rate on 1/3rd or 1/4th cost of flat/house and interest on M.Is.-orders issued-clarification to the orders-issued.

Ref: 1. G.O.Ms.No.1666 Hg & U.D.D. dt. 16.12.88.
2. G.O.Ms.No. 174 Hg & U.D.D. dt. 7.2.91
3. G.O.Ms.No. 466 Hg & U.D.D. dt. 25.4.95

In the G.O. second cited, the Govt. have issued orders to collect the interest from the Govt. Servant allottees at the prevailing rate on 1/3rd or 1/4th cost of flat/house and interest on the monthly installments / alone from the date of ready for occupation till the date of sanction of House Building Advance.

Based on the above G.O. the Housing Board has issued orders to the Executive Engineer 7 Adm.Officers of the Divisions/ Units that the concession on interest charges given by the Govt. in the above Gov. order is applicable to the State Govt. Servants only and it is not applicable to other employees of the central Govt. order is applicable to other employees of the Central Govt., Electricity Board, Quasi and local body etc., Inspite of above instructions issued by the Board, many central Govt. employee allottees have approached the Board for extending such concession granted in the G.O. to them also. The Board has therefore requested the Govt. to issue specific orders to the effect that the G.O.Ms.No.174 Housing dt.7.2.91 is applicable to Tamil Nadu State Govt. allottees only and that it is not applicable to the Central Govt. employees and others, in order to avoid further litigation in such type of disputes in future.

The Govt. have considered the request of the Board and directed in the G.O.Ms.No. 466 Housing dt.25.4.95 third cited (G.O. copy annexured) that the orders issued in G.O.Ms.No.174 Hg.dt.7.2.91 shall be applicable only to the allottees who are the Tamil Nadu State Govt. Servants and it is not applicable to either central Govt. employees or the Board, Corporations or local body employees.

A copy of the above G.O. Ms. No.466 Hg. dt. 25.4.1995 is communicated to all Allottee Service Managers / Executive Engineer and Adm. Officers for reference and guidance.

The receipt of the circular may be acknowledged at once.

Encl :

Sd/. V. THANGAVELU
For Managing Director

Verified RealEstate

To

All the EES / ASMS
of city and Moffusil

// TRUE COPY //

Sd (   )
Superintendent

Verified RealEstate TM

COPY OF: G.O.Ms.No.466 dt.25.4.95.

ABSTRACT

Housing - TNHB - Purchase of ready built house/flat from the TNHB by the Govt.Servants the prevailing rate on 1/3rd or 1/4th cost of the flat/house and interest on monthly installments.-orders issued - clarification to the orders issued.

HOUSING & URBAN DEVELOPMENT DEPARTMENT

G.O.Ms.No.466 Dated: 25.4.1995

Read :

1. G.O.Ms.No.1666, H & UD dt.16.12.1988.
2. G.O.Ms.No. 174, H & UD dt. 07.02.1991.

Read also:

3. From the M.D., TNHB letter No.R3/17118/94 dt. 9.3.1994.

ORDER:

In the G.O. second cited, the Govt. have issued orders to collect the interest from the Govt. Servant allottees at the prevailing rate on 1/3rd or 1/4th cost of flat/house and interest on the monthly instalment alone from the date of ready for occupation till the date of sanction of House Building Advance.

Based on the above G.O., the Housing Board has issued orders to the Executive Engineer & Adm. officer of the Divisions/units that the concession on interest charges given by the Govt. in the above Govt. order is applicable to the State Govt. Servants only and it is not applicable to other employees of the Central Govt. Electricity Board, Quasi & local bodies etc. The Managing Director, TNHB in his letter third read above, has stated that inspite of the above instructions issued by the Board, for extending such concession granted in G.O. to them also. The Board has therefore requested the Govt. to issue specific orders to the effect that the G.O.Ms.No.174, Hg dt.7.2.1991 is applicable to the Central Govt. employees and others, in order to avoid further litigation in such type of disputes in future.

The Govt. after careful consideration direct that the orders issued in the G.O.Ms.No.174, Hg & U.D.D. dt.7.2.1991, shall be applicable only to the allottees who are the Tamil Nadu State Govt. servants and it is not applicable to either central Govt. employees or the Board, Corporation or local body employees.

(By order of the Governor)

L.N.VIJAYARAGHAVAN,
SECRETARY TO GOVERNMENT.

To
The Managing Director,
Tamil Nadu Housing Board, Madras-35.

//true copy//

Superintendent.

VerifiedByDealEstate ™

13(iii)

TAMIL NADU HOUSING BOARD

Circular Memo No.P.3/5967/90 Dated: 11.4.91.

Sub: Tamil Nadu Housing Board-Purchase of Ready built house/flat from TNHB by state Government employees - payment of interest on 1/3 or 1/4 cost of the house/flat clarification-Regarding.

Ref: 1. G.O.Ms.No.174, dt. 7.2.91.
2. Boards memo of even No.dt.6.3.91.

-----

of late some of the Executive Engineer and Administrative officer's have sought for clarification regarding applicability of the above G.O. to the Tamil Nadu Housing Board employees, employees of central, quasi, local bodies.

It is observed that the concession given by the Government in the G.O.cited to the state Government employees have also extended to Tamil Nadu Housing Board employees, since their application for allotment is being include in the category of state Government servants are also applicable to Tamil Nadu Housing Board employees.

The other central, local and quasi Government employees are not eligible for such concession as per the G.O.cited.

Al the Exe. Engr. & Adm. Officer's of city and Mofussil Units are requested to Mofussil Units are requested to adhere to the above and avoid such clarification in future.

(sd.) T.R.KRISHNAMOORTHY,
for Chairman & Managing Director.

To

All the Exe.Engr. & Adm.Officer's
City and Mofusil Units and all the Superintending Engineer's
Superintending Engineer's.

Copy to: I.T.P.A. Sections and
Assistant Secretary and
Deputy Secretary, (Co.or).

//forwarded by order//

Sd ( )
SUPERINTENDENT

Verified @ RealEstate ™

TAMIL NADU HOUSING BOARD

Circular Memo No.R1/55479/92 Dated: 09.09.92

Sub: Loans and Advances - HBA - Allotment of Tamil Nadu Housing Board flats/houses - Non-issue of A & B Certificate and cancellation of allotment orders - reg.

Ref: 1. G.O. Ms.No.1275 Hg & UD Dept. dt. 22.10.90
2. Board's Memo No.P3/76884/90 dt. 16.11.90
3. G.O.Ms.No.174 Housing & Urban Development Dept. dt. 07.02.91
4. Board's Memo P3/789833/91 dt. 30.12.91
5. Board's Memo No.P3/79833/91 DT. 09.05.92
6. Govt. Letter No.27231/HBA-1(1)/92-1 dt. 05.08.92 of Housing & Urban Development Dept.

In the G.O. Ms.No.1275 dated 22.10.90 1st cited, the Government had instructed to take action on cases where the Government servants in the event of not being able to get the House Building Advance from the Government with in a period of 6 months from the date of ready for occupation of the building, the allotment once converted from Hire purchase into outright purchase basis may again be converted into Hire Purchase basis and given effect from the date of original allotment and the interest amount collected from them should be adjusted towards monthly installment due.

2. The above G.O. was communicated to all the Executive Engineer and Administrative Officers and Allottee Service Managers of the City Divisions and Moffusil Units in the Board's Memo No.P3/76884/90 dated 16.11.90 2nd cited. Subsequently, instructions were again issued in the Board's Memo No.P3/79833/91 dated 30.12.91, 4th cited to implement the instructions issued in G.O.Ms.No.1275 dated 22.10.90. It was further instructed that since the sanction of House Building Advance to Government servants with in a period of 6 months from Government is unlikely in view of the present back log of applications, it has been decided by the Board in its Resolution No.6.06 dated 27.11.91 to issue N.O.C. only to Government Servant allottees under Hire Purchase basis for applying H.B.A. from H.D.F.C. or any other Housing financial institutions and N.O.C. to Government allottees for applying H.B.A. from Government need not be issued until further orders.

3. The Government in G.O. Ms.No.174 dated 07.02.91, 3rd cited have issued orders to collect interest from the Government servant allottees who have obtained A & B Certificates from the Board for applying H.B.A. from the Government at the prevailing rate on 1/3rd or 1/4 th cost of the flat/house as the case may be and the interest on the monthly instalment alone from the date of ready for occupation till the date of sanction of House Building Advance.

4. Now, the Government in their letter No.27231/HBA1(1)/92-1 dated 05.08.92, 6th cited have issued orders cancelling the G.O.Ms. No.1275 dated 22.10.90 and also directed the Board to follow the instructions issued in the G.O.Ms.No.174(Hg) dated 07.02.91 3rd cited.

5. In the light of the orders of the Government issued in the reference 6th cited, the following orders are issued.

(1) The earlier orders issued in Board's Memo 2nd and 4th cited are hereby cancelled.

(2) A & B certificates may be issued to all the State Government servants for applying HBA to Government by converting the allotment from Hire purchase basis to outright purchase basis.

(3) Where ever A & B Certificates are issued to Government servants allottees for getting HBA from Government by converting the allottment from Hire purchase basis to outright purchase basis, the interest at prevailing rate on 1/3rd or 1/4th cost of the flat/house as the case may be and interest on the monthly instalments alone should be collected from the Government servant allottees from the date of ready for occupation of the house/flat till the date of sanction of HBA by the Government as per the G.O. 3rd cited.

(4) As per the G.O. 3rd cited, the Government servants allottees should pay the interest every month on 1/3rd or 1/4th of the cost and interest on monthly instalment. If they default in payment of interest every month, action should be taken against the defaulters under the provision of Tamil Nadu Housing Board act for cancelling allotment and carrying out eviction after following the usual procedures.

(5) The No objection certificate may also be issued to the allottees for applying HBA from H.D.F.C. and other financial institutions.

(6) The above instructions should be followed by the Executive Engineer and Administrative Officers and Allottee Service Managers of City Divisions and Mofussil Units strictly.

(7) The receipt of this Circular memo should be acknowledge at once.

Sd/- R. Sampath
for Chairman & Managing Director

To
All the Executive Engineers & Adm. Officers
and Allottee Service Managers of City Divisions
and Moffusil Units
All Asst. Revenue Officers
All Superintending Engineers
Financial Adviser,
Cost Accountant
Chief Engineers
Deputy Secretary (Co-ordination)
Assistant Secretary
All the Co-ordination Sections.

forwarded / by order

Sd ( )
Superintendent

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

சிறப்பு சுற்றறிக்கை எண்: வா.வா.பி-2(3)/5951/98 நாள்: 20.02.98

பொருள்: தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - வருவாய் வசூல் - தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்தது வீட்டு வசதி கடன் தொகை பெற வேண்டிய ஏ மற்றும் பி சான்றிதழ் - வழங்கியது தகுதிக்கு மேற்பட்ட தொகையை தவணை முறையில் வசூல் செய்வது தொடர்பாக சில அறிவுரைகள் வழங்கல் - தொடர்பாக.

பார்வை:
1. வாரிய சுற்றறிக்கை எண். எஸ்3/31256/91 நாள்: 16.03.92
2. வாரிய சுற்றறிக்கை எண். ஆர்.சி.3/22318/96 நாள்: 18.12.96
3. மதுரை சரக மேற்பார்வை பொறியாளர் கடித எண். எஸ்4/8688/ 97, நாள் 08.12.97.

பார்வையில் கண்ட சுற்றறிக்கை மற்றும் கடிதங்களின் மீது அனைத்து செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. பார்வை 1-ல் கண்ட வாரிய சுற்றறிக்கையில் வாரிய குடியிருப்புகளை ஒதுக்கீடு பெற்ற அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி கடன் தொகைகள் வழங்கப்பட்டு அதன் பின்பும் அவர்களால் தொகைகள் ஏதும் செலுத்தப்படவேண்டியிருப்பின் அத்தொகைகளை சுலப தவணைகளில் வசூல் செய்யலாம் என அறிவுரை வழங்கப்பட்டது. ஆனால் அதன் பின் வாரியத்தின் கோட்டங்கள் பலவற்றிற்கு வாரிய வருவாய் பிரிவிலிருந்து வாரிய வருவாய் தொடர்பான ஆய்வுகள் மேற்கொண்டபோது, எந்த ஒரு கோட்டத்திலும் வாரிய குடியிருப்புகள் ஒதுக்கீடு பெற்ற அரசு ஊழியர்கள் வீட்டு வசதி கடன் தொகைகள் பெற்றபின் மீதமுள்ள அதாவது தகுதிக்கு மேற்பட்ட தொகைகள் செலுத்தப்படாதது கண்டறியப்பட்டது. அதனால் அதிக தொகைகள் வாரியத்திற்கு வந்து சேராமலும், அது தொடர்புடைய கேட்புகள் பேரேடுகளில் கொண்டு வரப்படாததை கண்டறியப்படவே, பார்வை இரண்டில் கண்ட சுற்றறிக்கை வாயிலாக தகுதிக்கு மேற்பட்ட தொகைகள் உரியவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டபிறகே குடியிருப்பை ஒப்படைக்க வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது. பொதுவாகவே இச்சுற்றறிக்கை கோட்டங்களில் ஒதுக்கீடு பிரிவில் மேற்கண்ட பொருள் குறித்து செயல்படாத தன்மையினையும், அரசு ஊழியர்கள் இது தொடர்பாக தொகைகள் செலுத்தப் படாத நிலையிலேயே தான் வழங்கப்பட்டது.

தற்போது வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை அதாவது அதிக வரவேற்பில்லாத திட்ட பகுதிகள் மற்றும் விற்பனையாகாத குடியிருப்புகளை, விற்கப்பட்டால் போதும் என்ற நிலையிலும் அரசு ஊழியர்கள் மேற்கண்ட குடியிருப்புகளை எடுத்துக் கொள்ள முன் வருவதாலும், அவர்களிடமிருந்து வீட்டு வசதி கடன் தொகைகள் மூலம் அனைத்து தொகைகளையும் எளிதில் பெறலாம் எனும் நிலையில் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. ஆனால் தற்போது வீட்டுவசதி வாரியம் கட்டப்படும் குடியிருப்புகளில் தொகைகள் தற்போதைய விலைவாசி உயர்வால் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி கடன் தகுதி தொகைகளை விட அதிகமாக இருப்பதால், மேற்கண்ட தொகைகளை ஒரே தவணையில் மொத்தமாக செலுத்த இயலாதென்பதாலும், அது தொடர்பாக அரசு ஊழியர்கள் பலரிடமிருந்து தவணை முறையில் தொகைகளை செலுத்துவதாக விண்ணப்பங்கள் வந்துகொண்டிருப்பதாகவும், வாரியத்தின் சுற்றறிக்கை பார்வை இரண்டில் கண்ட க்ஷரத்தினை சற்று தளர்த்தி உத்தரவிடுமாறு வேண்டியதில் பேரில் கீழ்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

1) அரசு ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்யும்போது அவர்களுடைய தகுதிகாண் ஊதியத்தை கணக்கிட்டு அவர் அந்த குடியிருப்பைப்பெற தகுதியுடையவரா என அறிந்த பின்னரே அவருக்கு ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும். குடியிருப்புகள் விற்கப்படவில்லை என்பதற்காக தகுதியில்லாதவருக்கு ஒதுக்கீடுகள் அளிப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

2) ஒதுக்கீடு பெற்று அரசு ஊழியர் வீட்டு வசதி கடன் பெற வேண்டி விண்ணப்பித்து, அவர் செலுத்த வேண்டிய தகுதிக்கு மேற்பட்ட தொகை மற்றும் அவர் அரசாணை எண்:174-ன் படி செலுத்த வேண்டிய வட்டி தொகை முதலானவை சேர்த்து போதிய சம்பளத்தொகை கையிருப்பில் எடுத்துச் செல்கின்றாரா என கண்டறியப்பட வேண்டும்.

3) வீட்டு வசதி கடன் தொகை பிடித்த தொகை மற்றும் தகுதிக்கு மேற்பட்ட தொகையின் தவணைத் தொகை ஆகியவற்றின் மொத்த தொகை அவரது சம்பளத்தில் பிடித்தம் செய்ய போதிய நிவாரணம் உள்ளதா எனவும் கண்டறியப்பட வேண்டும்.

மேற்கண்டவற்றினை கண்டறிந்து பின்னரே அவருக்கு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு, வரவேற்பில்லாத மற்றும் விற்பனையாகாத திட்ட பகுதிகளில் அரசு ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். குடியிருப்புகளுக்கு, தகுதிக்கு மேற்பட்ட தொகைகள் சற்று சிறிய தொகைகளாக இருப்பின், அவற்றின் தொகைகள் தவணைக் காலத்திற்குட்பட்டு, குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்யும் தினத்திலிருந்தே சுலப தவணைகளில் வசூல் செய்யலாம் என இதன் மூலம் உத்தரவு வழங்கப்படுகிறது. இவ்வுத்தரவு, அதிக வரவேற்பில்லாத மற்றும் விற்பனையாகாமல் உள்ள இனங்களுக்கு மட்டுமே பொருந்தும் எப்படியும், வாரிய நிதி நிலையை கருத்தல் கொண்டும், பொதுவாகவே தகுதிக்கு மேல் உள்ள தொகைகளை வசூல் செய்த பின்னர் குடியிருப்பை ஒப்படைத்தல் நல்லது. எனினும் ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்று பின்னரே மேற்கண்ட உத்தரவுகளை அமுல்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அதிக வரவேற்பில்லாத மற்றும் விற்பனையாகாமல் உள்ள இனங்களுக்கு இவ்வுத்தரவினை செயல்படுத்துமாறு அனைத்து கோட்ட செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்கள், ஒதுக்கீடு சேவை மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுகின்றனர்.

தா. சந்திர சேகரன்,
மேலாண்மை இயக்குநர்
நாள்: 20.02.98

பெறுநர்
அனைத்து கோட்ட செயற்பொறியாளர் மற்றும்
நிர்வாக அலுவலர்கள்
அனைத்து கோட்ட ஒதுக்கீடு சேவை மேலாளர்கள்
அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்
ஒருங்கிணைப்பு பிரிவுகள்
தணிக்கை பிரிவுகள்

ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

கண்காணிப்பாளர்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

சிறப்பு சுற்றறிக்கை எண்: ஒது.2(4)/30838/02 நாள்: 13.06.2002

பொருள்: தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - ஒதுக்கீடு - வாரியத்தால் செய்யப்படும் ஒதுக்கீடுகளுக்கு - ஒதுக்கீடுதாரர்கள் செலுத்திடும் மாதத் தவணைகளுக்கு நிதியாண்டு முடிவில் அசல்/வட்டி விவரம் வழங்கப்படுதல் - இந்த விவரங்களை ஒதுக்கீடு செய்தவுடன் வழங்க கோருதல் - வாரிய தீர்மானம் - குறித்து.

பார்வை: வாரிய கூட்டக் குறிப்பு மற்றும் தீர்மானம் எண்.9.04 நாள் 29.05.02

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செய்யப்படும் ஒதுக்கீடுகளுக்கு, ஒதுக்கீடுதாரர்கள் ஒவ்வொரு ஆண்டும் செலுத்திய தொகையில், அசல் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும் தொகை வட்டி கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும் தொகை தனித்தனியாக கணக்கிடப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டு முடிவுற்ற பின்னர் வருமான வரிச்சலுகை பெற்றிட ஒதுக்கீடுதாரர்களுக்கு ஏதுவாக இருக்கும் என்ற அடிப்படையில் ஒதுக்கீடுதாரர்கள் கேட்கும்போது வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

வீட்டு வசதி மேம்பாட்டு மற்றும் நிதிக் கழகத்தில் வீட்டு வசதிக் கடன் பெறுபவர்கள் செலுத்தும் மாதத் தவணையில், அசல் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும் தொகை வட்டி கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும் தொகை எவ்வளவு என்று முன்னதாகவே தெரிவிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டு இதே முறையை வாரியத்திலும் கடைபிடிக்குமாறு ஒதுக்கீடுதாரர் கோரியதைத் தொடர்ந்து இப்பொருள் வாரிய கூட்டத்தில் வைக்கப்பட்டு கீழ்க்காணுமாறு தீர்மானிக்கப்பட்டது.

"வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் ஒதுக்கீடுதாரர்களுக்கு அவர்கள் மாதத்தவணைகளில் அசல் கணக்கிற்கு/வட்டி கணக்கிற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் தொகை எவ்வளவு என்பதைக் குறிப்பிட்டு சான்றிதழ் வழங்க அந்தந்த செயற்பொறியாளரை அறிவுறுத்தலாம் எனவும், அவ்வாறு சான்றிதழ் கோருவோருக்கு சேவை கட்டணமாக ரூ.100/-ஐ வசூலிக்கவும் என வாரியம் தீர்மானித்தது"

வாரிய கூட்டக் குறிப்பு மற்றும் தீர்மானத்தின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, வாரிய தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளை உரிய முறையில் கடைபிடிக்குமாறு அனைத்து கோட்டம்/பிரிவு செயற்பொறியாளர்கள்/மேலாளர் - விற்பனை மற்றும் சேவை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இச்சுற்றறிக்கையைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/கே.என். வெங்கட்ரமணன்
மேலாண்மைஇயக்குநர்

இணைப்பு: வாரியக் கூட்டக் குறிப்பு
மற்றும் தீர்மானம் நகல்
மாதிரி படிவம்

பெறுநர்

அனைத்து கோட்டம் / பிரிவு செயற்பொறியாளர்கள்/மேலாளர்-விற்பனை மற்றும் சேவை

நகல்: அனைத்து சரக மேற்பார்வை - பொறியாளர்கள்
வாரிய ஒதுக்கீடு பிரிவு, பிரிவு அலுவலர்கள்/கண்காணிப்பாளர்கள்/ உதவியாளர்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(ஒம்)
பிரிவு அலுவலர்

மாதிரிப் படிவம்

திட்டத்தின் பெயர் ..

குடியிருப்பு எண். ..

ஒதுக்கீடுதாரர் பெயர் ..

12 மாதங்களுக்கு செலுத்தப்படும் தொகை	வட்டிக்கு கணக்கிடப்படும் தொகை	அசலுக்கு கணக்கிடப்படும் தொகை
(1)	(2)	(3)

Verified RealEstate™

இனம் எண். 5/02

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

வாரியக் கூட்டத்திற்கான குறிப்பு

பொருள்: ஒதுக்கீடு-ஒருங்கிணைப்பு - வாரியத்தால் செய்யப்படும் ஒதுக்கீடுகளுக்கு ஒதுக்கீடுதாரர்கள் செலுத்திடும் மாதத் தவணைகளுக்கு நிதியாண்டு முடிவில் அசல்/வட்டி விவரம் வழங்கப்படுதல் - இந்த விவரங்களை ஒதுக்கீடு செய்தவுடன் வழங்கக் கோருதல் - குறிப்பு வாரியத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (கோப்பு எண். ஒதுக்கீடு 2(4)/30838/02)

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் செய்யப்படும் ஒதுக்கீடுகளுக்கு ஒதுக்கீடுதாரர்கள் ஒவ்வொரு ஆண்டும் செலுத்திய தொகையில், அசல் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும் தொகை, வட்டி கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும் தொகை தனித்தனியாக கணக்கிடப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டு முடிவுற்ற பின்னர், வருமானவரிச் சலுகை பெற்றிட ஒதுக்கீடுதாரர்களுக்கு ஏதாவது இருக்கும் என்ற அடிப்படையில் ஒதுக்கீடுதாரர்கள் கேட்கும் போது வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது சென்னை அறிஞர் அண்ணா நகர் மேற்கு விரிவாக்கத்தில் அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீடு திரு.என்.வைத்தியநாத் தனது 24.05.02 நாளிட்ட கடிதத்தில் வீட்டுவசதி மேம்பாட்டு மற்றும் நிதிக் கழகத்தில் (HDFC), வீட்டுவசதிக் கடன் பெறுபவர்கள் செலுத்தும் மாதத் தவணையில், அசல் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும் தொகை வட்டி கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படும் தொகை எவ்வளவு எடுத்துக் கொள்ளப்படும் என்பது முன்னதாகவே தெரிவிக்கப்படுகிறது. இதே முறையை வீட்டுவசதி வாரியத்திற்கும் கடைபிடித்திடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். இவ்வாறு செய்வதால் அலுவலகத்தில் வருமானவரி அந்த அளவிற்கு குறைத்து பிடித்தம் செய்தால் போதும். இல்லையென்றால் முதலில் முழு தொகைக்கு வருமான வரி பிடிக்கப்பட்டு பின்னர் வருமானவரித் துறையிடமிருந்து தான் (Refund) திரும்பப் பெற வேண்டும்.

திரு.எஸ்.வைத்தியநாதன் குறிப்பிட்டுள்ள நடைமுறையை வாரியத்தில் கடைபிடிப்பதால் வாரியத்திற்கு எவ்வித பாதிப்பும் இல்லை. எனவே, இனிவரும் காலத்தில் வாரிய ஒதுக்கீடுகளுக்கு செய்யப்படும் ஒதுக்கீடுகளில் வாரியம் நிர்ணயம் செய்யும் மாதத் தவணைகளில், அசல் கணக்கிற்கு/வட்டி கணக்கிற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் தொகை எவ்வளவு என்பதை குறிப்பிட்டு சான்றிதழ் வழங்கிடுமாறு அனைத்து செயற்பொறியாளர்களையும் அறிவுறுத்தலாம். இவ்வாறு சான்றிதழ் கோருவோருக்கு சேவை கட்டணமாதக ரூ.500/- வசூலிக்கலாம். இப்போது உள்ள நடைமுறை விதிகளின்படி, நிதியாண்டு முடிவுற்றவுடன் ஒதுக்கீடுதாரர் செலுத்திய தொகையில் அசல்/வட்டி கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தொகையின் விவரத்தை வழங்கும் முறையை தொடர்ந்து கடைபிடிக்கலாம்.

மேலே உள்ள குறிப்பு வாரியத்தின் முடிவிற்காக வைக்கப்படுகிறது.

ஒம்./கே.என்.வெங்கட்டரமணன்
27.05.2002
மேலாண்மை இயக்குநர்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

தீர்மானம் எண். 9.04 நாள்: 29.05.2002

வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் ஒதுக்கீடுதாரர்களுக்கு அவர்கள் செலுத்தும் மாதத் தவணைகளில் அசல் கணக்கிற்கு/வட்டி கணக்கிற்கு கணக்கில் எடுத்து கொள்ளப்படும் தொகை எவ்வளவு என்பதை குறிப்பிட்டு சான்றிதழ் வழங்க அந்தந்த செயற்பொறியாளரை அறிவுறுத்தலாம் எனவும், அவ்வாறு சான்றிதழ் கோருவோருக்கு சேவை கட்டணமாக ரூ.100/-ஐ வசூலிக்கவும் வாரியம் தீர்மானிக்கிறது.

ஒம்./அ. நாகராஜன்
தலைவர்
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

//உண்மை நகல்//

(ஒம்)
பிரிவு அலுவலர்

Verified RealEstate

REVOCATION OF CANCELLATION OF ALLOTMENT

Executive Engineer & Admn. Officers/Allottees Service Manager are authorized to revoke the cancellation made by them for non-payment of Monthly Instalment arrear in cases where the allottees come forward with a request within one month from the date of receipt of cancellation orders to restore the allotments subject to collection of revocation charges.

M.D's Order have to be obtained for revocation of allotments in other cases (Circular Memo No.R1/10460 A/82 dated 24.05.1983).

Verified RealEstate™

TAMIL NADU HOUSING BOARD

Cir.Memo No.R/10460A/82 Dated: 24.05.83

Sub: Tamil Nadu Housing Board - Reviewing the activities of the Tamil Nadu Housing Board in the meeting held No.7,8, 83 minutes of the meeting - Orders delegating the powers to Executive Engineers and Administrative Officer's to revoke the cancellation orders - regarding.

Ref: Minutes of the Review - meeting held on 7,9,83 in the Secretariat.

The Commissioner and Secretary to Government while reviewing the activities of the Tamil Nadu Housing Board during the meeting help on 7.3.83 at Secretariat has observed to consider the question of delegating the powers of revoting the cancellation orders made for the non-payment of monthly instalment arrears to the Executive Engineer and Administrative officers to avoid delay.

The procedure hitherto being followed in regard to the cancellation and revocation of allotment is that the Executive Engineer in order to step up the collection are cancelling the allotments made to the defaulting allottees after observing the usual formalities. The vacancies thus arise are being brought under the clear vacancy list only after a period of one month from the date of cancellation order. If within that period the allottees happen to come forward with a request for the restoration of allotments in their favour, such requests are being submitted by the Executive Engineers for the approval of the Chairman who after examining the case will order the revocation of cancellation orders by collecting the entire dues together with revocation fees.

Since this is a time consuming process, as suggested by the Commissioner and Secretary to Government during the last review meeting, in order to avoid delay, the Executive Engineers and Administrative Officers of the City Divisions and Moffusill Units are authorised to revoke cancellations made by them for non-payment of monthly instalments arrears, in ease where the allottees come forward with a request within a month from the date of receipt of cancellation orders to restore the allotments in their favour. In such ease the Executive Engineers ean revoke the cancellation orders and restore the allotments in favour of the original allottees after collecting the entire dues with interest together with revocation fees.

The Executive Engineers and Administrative Officers are requested to note that the powers to revoke the cancellations are delegated for restoration of allotments cancelled due to default in making payments due to the spard. Such revocation can also be made by them only when applications are duly made within a month of

cancellation accompanied by payment in full of accumulated arrears inclusive of interest along with revocation fee.

Chairman's orders have to be obtained for revocation of allotments in other cases.

The receipt of the memo should be acknowledged.

Sd. Velur D. Narayanan
Chairman/24.05.1983

To

All The Executive Engineer and Administrative
Officers of the City and Moffussil Units
`P' `R', `T' Sections.

// true copy //

Sd (   )
Superintendent

Verified RealEstate™

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

சுற்றறிக்கை குறிப்பாணை எண். ஒதுக்கீடு 4(3)/40012/98

பொருள் : தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - ஒதுக்கீடு மாதத் தவணை நிலுவை ஏற்பட்டதால் ஒதுக்கீடு இரத்து செய்யப்பட்டது - ஒதுக்கீடுதாரர் நிலுவையினை செலுத்த முன் வருதல் - ஒதுக்கீடு இரத்து ஆணையை திரும்ப பெறுதல் - செயற்பொறியாளர்/செயற் பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர்/ஒதுக்கீடு சேவை மேலாளருக்கும் அதிகாரம் வழங்குதல் குறித்து.

பார்வை : வாரிய சுற்றறிக்கை எண்.ஆர்1/10460/எ/82 நாள் 24.05.03.

பார்வையில் குறிக்கப்பட்டுள்ள வாரிய சுற்றறிக்கையில் ஒதுக்கீடு இரத்து செய்யப்பெற்ற ஒதுக்கீடுதாரர்கள் ஒரு மாத காலத்திற்குள் இரத்து நீக்க கட்டணத்துடன் மாத் தவணை நிலுவையை செய்யலாம் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இரத்து செய்யப்பட்ட மனைகளின் ஒதுக்கீடுதாரர்கள் ஒரு மாத காலத்திற்கு பின்பு இரத்து நீக்கக் கட்டணத்துடன் மாத நிலுவைத் தொகையை செலுத்த முன்வரும்போது இரத்து நீக்கத்திற்கு மேலாண்மை இயக்குநர் அவர்கள் ஆணை பெறப்படவேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள விதிமுறையை பின்பற்றி செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர்/ஒதுக்கீடு சேவை மேலாளர் மேலாண்மை இயக்குநருக்கு ஒதுக்கீடு இரத்தை திரும்பப் பெறுதல் சம்பந்தமாக பிரேரணை அனுப்பி, மேலாண்மை இயக்குநர் அவர்களின் ஆணை வரும் வரை காத்திருப்பதால் மனைக்காக பணம் செலுத்த வரும் ஒதுக்கீடுதாரர்களிடம் உடனடியாக வசூல் செய்ய நிர்ணயிக்கும் இலக்கை எட்ட இயலவில்லை. தவிர இரத்து நீக்கம் கோரிவரும் ஒதுக்கீடுதாரர்களுக்கு வாரியத்திடமிருந்து ஒப்புதல் பெற்று ஆணை வழங்க ஏற்படும் கால தாமதத்தால் இடைப்பட்ட காலத்தில் ஏற்படும் ஒரு சில காரணங்களால் ஒதுக்கீடுதாரர்கள் பணம் கட்டுவது நிச்சயமில்லாததாகி விடுகிறது.

இந்த சூழ்நிலையில் இனிவரும் காலங்களில் இது போன்ற கால தாமதத்தினை தவிர்த்திடும் வகையில் ஒதுக்கீடு இரத்து நீக்க ஆணை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்/ஒதுக்கீடு சேவை மேலாளர்களுக்கு அதிகாரம் வழங்கிடலாம் என முடிவு செய்யப்பட்டது. அதன்படி இனி ஒதுக்கீடுதாரர்கள் ஒதுக்கீட்டிற்கான நிலுவையினை செலுத்தவில்லை என்ற காரணத்திற்காக ஒதுக்கீடு இரத்து செய்யப்பட்டால் அந்த ஒதுக்கீட்டு இரத்து ஆணையை திரும்பப் பெறும் அதிகாரம் அனைத்து கோட்ட / பிரிவு செயற்பொறியாளர்/ஒதுக்கீடு சேவை மேலாளருக்கும் வழங்கப்படுகிறது.

எனினும் இவ்வாறு வழங்கப்படும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாமலிருப்பதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இரத்து நீக்கம் செய்யலாம்.

1. இரத்து நீக்கம் கோரி வருபவர் ஒதுக்கீடுதாரராக மட்டுமே இருக்க வேண்டும்.
2. இதை உறுதிப்படுத்துவதற்கு அவரிடம் உள்ள உண்மை ஆவணங்கள் அனைத்தையும் அவரிடமிருந்து பெற்று கோட்ட அலுவலகத்திலுள்ள ஆவணங்களுடன் ஒப்பிட்டு சரிபார்த்து கொள்ள வேண்டும்.
3. ஒதுக்கீடுதாரர் தவிர மற்ற எவரும் ஒதுக்கீடு இரத்து நீக்கம் கோரி வந்தால் அதனை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கலாகாது.
4. மாதத் தவணையில் நிலுவை வைத்திருந்து அதனால் அவருடைய ஒதுக்கீடு இரத்து செய்யப்பட்டிருந்தால் அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மனையின் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் வரைபட அனுமதி பெற்று அதன்படி வீடு கட்டப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துக் கொள்ள வேண்டும்.
5. ஒதுக்கீட்டாளரால் கொடுக்கப்பட்ட பகராள் செயலுரிமை ஆவணம் பெற்ற நபர் இரத்து நீக்க ஆணை கோரினாலும் அதை நிராகரித்துவிட வேண்டும்.

6. இரத்து நீக்கம் செய்யப்பட்ட இனங்கள் குறித்தும் எவ்வளவு காலம் கடந்து இரத்து நீக்கம் செய்யப்பட்டது என்பது குறித்தும் மாதாந்தரப் பட்டியலை அதற்கு அடுத்த மாதம் 5ம் தேதியன்று கிடைக்குமாறு வாரியத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். காலங்கடந்து பட்டியலை அனுப்பி வைத்தால் சம்பந்தம்பட்டவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. இரத்து நீக்கம் செய்வதற்கு முன் விதிமுறைகள் அனைத்தும் சரியாக பின்பற்றி அதன்பின் தான் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வனைத்திற்கும் செயற் பொறியாளர்/ஒதுக்கீடு சேவை மேலாளர்களே முழு பொறுப்பேற்க வேண்டும். இதுபோன்ற இரத்து நீக்கத்தில் ஏதேனும் முறைகேடுகள் நடந்துள்ளதாக புகார் பெறப்பட்டாலோ அல்லது கண்டறியப்பட்டாலோ சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்கள் ஒதுக்கீடு சேவை மேலாளர் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

8. இவ்வாணை இதுவரை தவணைத் தொகை நிலுவைக்காக இரத்து செய்யப்பட ஒதுக்கீடுகளுக்கு மட்டுமே பொருந்தும். ஒதுக்கீடு பெற்று முன் வைப்புத் தொகை செலுத்தாமல் இரத்து செய்யப்பட்டு வெகுகாலமாக வைத்திருக்கும் நிகழ்வுகளுக்கு இது பொருந்தாது. இனிமேல் இரத்து செய்யப்படும் ஒதுக்கீடுகள் ஒரு மாதத்திற்குள்ளேயே இரத்து நீக்கம் செய்தல் வேண்டும். அதற்கு மேலும் இரத்து நீக்கம் செய்யவில்லை எனில் மறு ஒதுக்கீட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

9. இதுவரை இரத்து செய்யப்பட்ட மனைகளில் வீடும் கட்டாமல் இருக்கும் ஒதுக்கீடுகளை கண்டுபிடித்து உடனே மறு ஒதுக்கீட்டிற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளை எவ்வித விடுபடுதலுமின்றி முறையாக கடைபிடித்து ஒதுக்கீட்டு இரத்து ஆணை திரும்பப் பெறுதல் உத்தரவினை செயற்பொறியாளர்/ஒதுக்கீடு சேவை மேலாளர் வழங்கிடலாம்.

இந்த சுற்றறிக்கை குறிப்பாணை கிடைக்கப்பெற்றதற்கான ஒப்புகையை உடனே அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பம்/-து. இராசேந்திரன்
மேலாண்மை இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து
செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர்,
ஒதுக்கீடு சேவை மேலாளர்
நகல்:
அனைத்து தலைமைப் பொறியாளர்கள்,
அனைத்து மேற்பார்வைப் பொறியாளர்கள்.

ஒதுக்கீடு பிரிவு 1,2,3 மற்றும் 4
கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள்.

//உத்திரவின்படி அனுப்பப்படுகிறது//

(ஓம்)
துணைச் செயலாளர்
(ஒதுக்கீடு)

Verified @ RealEstate

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

சுற்றறிக்கை குறிப்பாணை எண். ஒதுக்கீடு 2(2)/28046/93

நாள்: 02.07.99

பொருள் : தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - ஒதுக்கீடு பிரிவு - ஒதுக்கீடு ஆணை கிடைக்கப் பெற்று, முன்வைப்புத் தொகையையும் செலுத்திய பின்பு, ஒரு சில காரணங்களுக்காக அக்குடியிருப்பினை சரண் செய்தாலோ அல்லது ஏற்க மறுத்தாலோ - அவர்களடமிருந்து வட்டி வசூல் செய்தல் - உத்தரவு வழங்கப்படுகிறது.

பார்வை : 1. வாரிய சுற்றறிக்கை எண். ஒதுக்கீடு2(2)/28046/93, நாள் 11.11.97
2. வாரிய தீர்மான எண். 09.04, நாள் 28.06.99.

வாரிய சுற்றறிக்கை எண். ஒதுக்கீடு 2(2)/28046/93 நாள் 11.11.97-இல் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டு, வீட்டினை சரண் செய்யும்/எடுக்க மறுப்பு தெரிவிக்கப்பட்ட நிகழ்வுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்புகள் முதலியவற்றை ஒதுக்கீடுதாரர்களுக்கு ஒப்படைப்பு (Handing Over) செய்யப்பட வில்லையெனில் அவர்கள் செலுத்திய தொகையில் கீழ்கண்ட தொகையினை அபராதமாக வசூலிக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒப்படைப்பு செய்யப்பட்ட நிகழ்வுகளில் வீடு குடிபுக தயார் ஆன நாள் முதல் சரண் செய்யும் நாள் வரை வட்டி அல்லது பொருளாதார வாடகை (Economic Rent) என அதிகமோ அது ஒதுக்கீடுதாரரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும் என உத்திரவு வழங்கப்பட்டது.

வரிசை எண்.	பிரிவு	அபராத தொகை
1.	பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு	500
2.	குறைந்த வருவாய் பிரிவு	750
3.	மத்திய வருவவ் பிரிவு	1000
4.	உயர்தர வருவாய் பிரிவு	1000
5.	பெரிய மனைகள்	1000
6.	ஏ.பி. மற்றும் சிறிய மனைகள்	500

இவ்விதம் குறைந்த விலை அபராதமாக விதிக்கப்படுவதால் ஒதுக்கீடுதாரர்கள் நிறைய நிகழ்வுகளில் தமது ஒதுக்கீடுகளை சரண் செய்கின்றனர் அல்லது ஒதுக்கீடுகளை ஏற்க மறுக்கின்றனர். இவ்வாறு மீண்டும் வாரியத்திற்கு சரண் செய்யப்படும்/ ஏற்கமறுக்கும் அலகுகளை மறு ஒதுக்கீடு செய்ய நீக்க காலதாமதம் ஏற்படுவதுடன் வட்டி முதலாக்கத்தால் அலகுகளின் விலை கூடும் வாய்ப்புள்ளது. மேலும் தற்பொழுது நடைமுறையிலுள்ள ரூ.1,000/- அபராதம் விதிப்பதற்கு பதிலாக முழுத் தொகை மீதான வட்டி/வசூலிப்பதால், அபராதத் தொகையில் ஏற்படும் உயர்வினை கருத்தில் கொண்டு இவ்விதம் சரண் செய்வோர் / ஏற் மறுப்பவர்களின் எண்ணிக்கை கணிசமாக குறைய வாய்ப்புள்ளது.

எனவே, இவ்வித நிகழ்வுகளில், அபராத தொகையாக, இவ்வலகுகள் குடிபுக தயாரான நாள் / ஒதுக்கீட்டாணை வழங்கப்பட்ட நாள் இவற்றிலிருந்து ஒதுக்கீட்டாளர் ஒதுக்கீட்டை வாரியத்திற்கு திரும்ப அளிக்கும் நாள் வரையில், அப்போது நடைமுறைிலுள்ள வட்டி விகிதத்தில் (Current ruling rate) முழுத் தொகைக்கு வட்டியினை வசூலிக்கலாமா என்று முடிவெடுக்கும் பொருட்டு வாரியத்தின் முன்

வைக்கப்பட்டது. வாரியத் தீர்மான எண்.9.04, நாள் 28.06.99ல் வாரியம் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றியது.

"மேற்கண்ட கருத்துருவை பரிசீலனை செய்து வாரியம் கீழ்கண்டவாறு தீர்மானித்தது. வாரியத்தில் ஒதுக்கீடு பெற்ற, ஒதுக்கீடுதாரர்கள், தங்களுக்கு ஒதுக்கீடு ஆணை கிடைக்கப்பெற்று, முன்வைப்புத் தொகையையும் செலுத்திய பின்பு, ஒரு சில காரணங்களுக்காக, அக்குடியிருப்பினை சரண் செய்தாலோ அல்லது ஏற்க மறுத்தாலோ, இதனால் வாரியத்திற்கு ஏற்படும் இழப்பினை கருத்தில் கொண்டு வீட்டின்/மனையின் முழுவிலை மதிப்பிற்கு அபராத கட்டணமாக, நடைமுறை வட்டிவிகிதத்தில் (16 விழுக்காடு) வட்டி கணக்கிட்டு, இவ்வலகுகள் குடிபுக தயாரான நாள் / ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒதுக்கீடுதாரர் அதனை வாரித்திற்கு திரும்ப அளிக்கும் நாள் வரையிலான காலத்துக்கு, வட்டி வசூல் செய்தல்".

அனைத்து செயற் பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்களும்/ஒதுக்கீடு சேவை மேலாளர்களும் மேலே கூறப்பட்டுள்ள வாரியத் தீர்மானத்தின்படி மேல் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இச்சுற்றறிக்கை குறிப்பாணை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை வாரியத்திற்கு உடனடியாக அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-து.இராசேந்திரன்
மேலாண்மை இயக்குநருக்காக

பெறுநர்
அனைத்துக் கோட்டம்/பிரிவு
செயற் பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்/
கோயம்புத்தூர் சிறப்புக் கோட்டம் - 2
அனைத்துக் கோட்டம் / பிரிவு
ஒதுக்கீடு சேவை மேலாளர்
அனைத்து சரகம் / மேற்பார்வை பொறியாளர்கள்

நகல்: ஒதுக்கீடு பிரிவு 1(4) நகல்கள்
ஒதுக்கீடு பிரிவு 2(4) நகல்கள்
ஒதுக்கீடு பிரிவு 3(6) நகல்கள்
ஒதுக்கீடு பிரிவு 4(4) நகல்கள்

//உத்திரவின்படி அனுப்பப்படுகிறது//

(ஒம்)
கண்காணிப்பாளர்

Verified RealEstate

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

சுற்றறிக்கை குறிப்பாணை எண். ஒதுக்கீடு 2(5)/6858/2000

நாள்: 13.04.2001

பொருள் : தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - ஒதுக்கீடு - வாரிய மற்றும் தன்னிறைவு வீட்டு மனை திட்டங்களில் செய்யப்படும் ஒதுக்கீடுகள் - மாதத் தவணை நிலுவையிலுள்ளதால் இரத்து செய்யப்பட்டது - இரத்து ஆணையை திரும்ப பெறுதல் - பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் - சம்மந்தமாக.

பார்வை :

1. வாரிய சுற்றறிக்கை குறிப்பாணை எண். ஆர்.1/10469எ/82 நாள் 24.05.83.
2. வாரிய சுற்றறிக்கை குறிப்பாணை எண்.ஒது.4(2)/40012/98, நாள் 30.07.98

பார்வை ஒன்றிலுள்ள குறிப்பாணையில் ஒதுக்கீடு இரத்து செய்யப்பெற்ற ஒதுக்கீடுதாரர்கள் ஒரு மாத காலத்திற்குள் இரத்து நீக்க கட்டணத்துடன் மாதத் தவணை நிலுவையை செலுத்த முன்வந்தால் சம்பந்தப்பட்ட கோட்டத்தின் செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் அவர்களே இரத்து நீக்கம் செய்யலாம் என ஆணை பிறப்பிக்கப்பட்டது. இரத்து செய்யப்பட்ட மனைகளின் ஒதுக்கீடுதாரர்கள் ஒரு மாத காலத்திற்கு பின்பு இரத்து நீக்க கட்டணத்துடன் மாத நிலுவைத் தொகையை செலுத்த முன்வரும்போது இரத்து நீக்கத்திற்கு மேலாண்மை இயக்குநர் அவர்களின் ஆணை பெறப்பட வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைப்படி செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்/ஒதுக்கீடு சேவை மேலாளர், வாரியத்திற்கு ஒதுக்கீடு இரத்தை திரும்பப் பெறுதல் சம்மந்தமாக பிரேரணை அனுப்பி மேலாண்மை இயக்குநர் அவர்களின் ஆணை வரும்வரை காத்திருப்பதால் மனைக்காக நிலுவைத் தொகை செலுத்த வரும் ஒதுக்கீடுதாரர்களிடம் உடனடியாக தொகை வசூல் செய்ய முடியவில்லை. இதனால் இது போன்று காலதாமதத்தினை தவிர்த்திடும் வகையில் ஒதுக்கீடு இரத்து நீக்க ஆணை வழங்குவதற்கு சம்மந்தப்பட்ட செயற்பொறியாளர்/ஒதுக்கீடுக்கென்று மேலாளருக்கு அதிகாரம் வழங்கிடலாம் என்று முடிவெடுக்கப்பட்டு ஒதுக்கீடுதாரர்கள் ஒதுக்கீட்டிற்கான நிலுவை தொகையினை செலுத்திவில்லை என்ற காரணத்திற்கான ஒதுக்கீடு இரத்து செய்ப்பட்டால் அந்த ஒதுக்கீட்டு இரத்து ஆணையை திரும்பப் பெறும் அதிகாரம் அனைத்து கோட்ட/பிரிவு செயற்பொறியாளர்/ஒதுக்கீடு சேவை மேலாளருக்கும் பார்வை - 2ல் உள்ள குறிப்பாணைப்படி வழங்கப்பட்டது.

30.07.93 நாளிட்ட குறிப்பாணைப்படி இரத்து நீக்க ஆணை பிறப்பிக்கப்பட்ட சில இனங்களை ஆய்வு செய்து பார்த்தபோது அந்த ஆணை பலவிதங்களில் துஷ்பிரேயோகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இதற்கு முன் நடந்து பல முந்நிகழ்வுகளை ஆய்வு செய்தலில் ஒதுக்கீடுகள் இரத்து செய்யும்போது சரியான அறிவிப்புக் கொடுக்கப்படவில்லை என்பது பெதுவான குறையாகக் கண்டறியப்பட்டு நீதிமன்றங்களில் அதானல் வழக்குகள் வாரியத்திற்கு பாதகமாகவும் அமைந்துள்ளன.

எனவே, அந்த 30.07.98 நாளிட்ட சுற்றறிக்கை குறிப்பாணை உடனடியாக இரத்து செய்யப்படுகிறது.

தன்னிறைவு வீட்டு மனைத் திட்டங்கள்

அரசாணை (நிலை) எண்.871, நாள் 27.05.91ல் தன்னிறைவு திட்டங்களில் ஒதுக்கீடு, மறு ஒதுக்கீடு, இரத்து செய்தல், பெயர்மாற்றம் போன்ற நிகழ்வுகளை தன்னிறைவு வீட்டு மனைத் திட்டக்குழு (எஸ் & எஸ் கமிட்டி) மூலம் செயல்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இரத்த நீக்கம் செய்வது சம்மந்தமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆணைகள் இதன்மூலம் பிறப்பிக்கப்படுகின்றன.

1) தன்னிறைவு திட்டங்களில் ஒதுக்கீட்டிற்கான தவணை நிலுவைத் தொகை செலுத்தாததால் ஒதுக்கீடு இரத்து செய்யும்போது ஒதுக்கீடுதாரருக்கு அவர் கடைசியாக கொடுத்த முகவரிக்கு முறையாக அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதை உறுதி செய்து அதற்குரிய ஆவணங்களைக் கோப்பில் வைத்திருக்க வேண்டும்.

இரத்து செய்யப்பட்ட இனங்களை இரத்து நீக்கம் செய்யுமாறு ஒதுக்கீடுதாரர்கள் ஒதுக்டு இரத்து செய்யப்பட்ட மூன்று மாதங்களுக்கும் நிலுவைத் தொகையை (வட்டியுடன்) இரத்து நீக்க கட்டணத்துடன் செலுத்த முன்வருவதாக கோரிக்கை சமர்ப்பித்தால் மற்ற விதிமுறைகளை ஆய்வு செய்து உரிய முறையில் இரத்து நீக்க ஆணையை நிலுவைத் தொகை வட்டி இரத்து நீக்க கட்டணம் வசூலித்த பின்னர் சம்மந்தப்பட்ட கோட்ட செயற்பொறியாளர்/மேலாளர் - விற்பனை மற்றும் சேவை அவர்களே பிறப்பிக்கலாம்.

2) இரத்து நீக்க கோரிக்கை இரத்து நீக்கம் செய்யப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குப் பின் சமர்ப்பித்தால், அரசாணைப்படி அது ஏற்க இயலாதென்பதால் இந்த இனங்களின் மறு ஒதுக்கீடு குறித்து அனைத்து விவரங்களுடன், எஸ் & எஸ் கமிட்டியின் முன் பொருள் நிரல் வைத்து, கமிட்டி முடிவின்படிதான் செயல்பட வேண்டும். ஒதுக்கீடு இரத்து செய்யப்பட்ட மூன்று மாதங்களுக்குள் இரத்து நீக்க கோரிக்கை பெறப்படாத இனங்களில், மனையில் வீடு கட்டப்பட்டிருப்பின் இது குறித்து எஸ் & எஸ் கமிட்டி முடிவின்படி தான் செயல்பட வேண்டும்.

மேலே உள்ள திருத்திய விதிமுறைகள் உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

தன்னிறைவு வீட்டுமனைத் திட்டம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் வழியாக செயல்பட்ட (மற்றும்) இனி செய்யப்படும் அனைத்து ஒதுக்கீடுகளுக்கும் இவ்விதிமுறைகள் கண்டிப்பாக எவ்வித விடுபடுதலுமின்றி கடைபிடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

வாரியத்தின் மற்றைய திட்டங்களில் மாதாந்திர தவணைத் தொகை நிலுவை காரணமாக இரத்து செய்யப்பட்ட/செய்யப்படும் ஒதுக்கீடுகளை இரத்து நீக்கம் செய்ய கோரி ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து முழு நிலுவைத் தொகையை அன்றைய தேதி வரை வட்டி மற்றும் இரத்து நீக்க கட்டணத்துடன் கோரிக்கை பெறப்பட்டால் விதிமுறைகளைப் பின்பற்றி கோட்டம்/பிரிவு செயற்பொறியாளர் / மேலாளர்-விற்பனை மற்றும் சேவை அவர்களே இரத்து நீக்க ஆணை பிறப்பிக்கலாம்.

மூன்று மாத காலத்திற்குள் கோரிக்கை எதுவும் பெறப்படவில்லையெனில் இந்த இனங்களின் மறு ஒதுக்கீடு குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இதன் சம்மந்தமாக ஒதுக்கீடுதாரர் கோரிக்கை பின்னர் பெறப்பட்டாலோ அல்லது வேறு பிரச்சனைகள் ஏற்பட்டாலோ முழு விவரங்களுடன் வாரியத்திற்கு கருத்துரு அனுப்பி மேலாண்மை இயக்குநர் அவர்கள் ஆணை பெற்ற பின்னர் தான் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இச்சுற்றறிக்கையை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அனுப்பி வைக்குமாறு அனைத்து கோட்டம் / பிரிவு செயற்பொறியாளர்/மேலாளர்-விற்பனை மற்றும் சேவை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்./நா. வாசுதேவன்
மேலாண்மை இயக்குநர்

பெறுநர்
அனைத்துக் கோட்டம் / பிரிவு
செயற்பொறியாளர்/மேலாளர்-விற்பனை மற்றும் சேவை

நகல்:

1. தலைமைப் பொறியாளர், வாரியத் தலைமையகம், சென்னை - 35.
2. அனைத்து சரக மேற்பார்வை பொறியாளர்கள்
3. பிரிவு அலுவலர்/கண்காணிப்பாளர் சட்டப்பிரிவு 1 & 2 வாரியத் தலைமையகம்
4. பிரிவு அலுவலர்கள் மற்றும் உதவியாளர்கள் ஒதுக்கீடு பிரிவு 1,2 & 3, வாரியத் தலைமையகம்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

(ஒம்)
உதவி செயலாளர் (ஒதுக்கீடு)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

சுற்றறிக்கை குறிப்பாணை எண். ஒதுக்கீடு 2(5/6858/90

நாள்: 04.01.2002

பொருள் : தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - ஒதுக்கீடு - வாரிய மற்றும் தன்னிறைவு வீட்டு மனை திட்டங்களில் மாதத் தவணை நிலுவை காரணமாக இரத்து செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் - இரத்து நீக்கம் செய்வது குறித்து திருத்தப்பட்ட வழிமுறைகள் சம்பந்தமாக

பார்வை : வாரிய சுற்றறிக்கை குறிப்பாணை எண். ஒதுக்கீடு 2(5)/6858/ 2000 நாள் 13.04.2001.

வாரிய மற்றும் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டங்களில் மாதத் தவணை நிலுவை செலுத்தாத காரணத்தால் இரத்து செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை இரத்து நீக்கம் செய்வது சம்பந்தமாக வழிமுறைகள் பார்வையிலுள்ள வாரிய சுற்றறிக்கை மூலம் வழங்கப்பட்டன.

இரத்து நீக்கம் செய்வது சம்பந்தமாக ஒரு பொதுவான முடிவெடுக்கும் பொருட்டு வாரியக் கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டது.

வாரியத் தீர்மானம் எண்.9.04 நாள் 27.11.2001-ல் "பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு (இ.டபிள்யு.எஸ்.ஏ மற்றும் பி) ஒதுக்கப்பட்டு இரத்து செய்யப்பட்ட 11 மனைகளுக்கு மட்டும் இரத்து நீக்கம் செய்வது என்றும் மற்ற பிரிவினருக்கு ஏற்க இயலாது" என்றும் வாரியம் தீர்மானித்தது.

1) எனவே இதுவரை வாரிய/தன்னிறைவு திட்டங்களில் மாதத் தவணை நிலுவை செலுத்தாத காரணத்தால் இரத்து செய்யப்பட்டு இன்றைய தேதிவரை இரத்து நீக்கம் செய்யப்படாமலும் மறு ஒதுக்கீடு செய்யப்படாமலும் உள்ள அனைத்து பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு இனங்களுக்குரிய ஒதுக்கீடுதாரர்களுக்கும் இறுதி வாய்ப்பளிக்கும் வகையில் இச்சுற்றறிக்கை பெற்ற உடன் பதிவு அஞ்சலில் கடிதம் அனுப்பி ஒரு மாத காலம் அவகாசம் கொடுத்து அதற்குள் ஒதுக்கீட்டிற்கு நடப்பு மாதம் வரை மாதத் தவணை நிலுவை தொகை உரிய வட்டியுடன் மற்றும் இரத்து நீக்க கட்டணம் செலுத்தி இரத்து நீக்கம் பெற்றுக் கொள்ளுமாறு விவரம் தெரிவிக்கப்படவேண்டும். ஒரு மாத கால அவகாசத்திற்குள் உரிய தொகை செலுத்தினால் விதிமுறைகளைக் கடைபிடித்து சம்பந்தப்பட்ட கோட்ட /பிரிவு செயற்பொறியாளர்கள்/மேலாளர் விற்பனை மற்றும் ஒதுக்கீடு சேவை அவர்கள் இரத்து நீக்கம் செய்ய வேண்டும். ஒரு மாத கால அவகாசம் முடிவுற்ற பின்னர் நிலுவைத் தொகை செலுத்தாததனால் இரத்து செய்யப்பட்டுள்ள பொருளாதார நலிவுற்ற பிரிவு (இ.டபிள்யு.எஸ்.ஏ மற்றும் பி) ஒதுக்கீடுகள் அனைத்தினையும் உரிய முறையில் மறு ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2) இதுவரை இரத்து செய்யப்பட்டு இரத்த நீக்கம் செய்யப்படாமல் உள்ள எல்.ஐ.ஜி.1 மற்றும் 2 எம்.ஐ.ஜி. மற்றும் எச்.ஐ.ஜி மனைகள் அடுக்குமாடி குடியிருப்புகள்/வீடுகள் இனங்களுக்கு இரத்து செய்யப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் தவணை நிலுவைத் தொகை மற்றுமு இரத்து நீக்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டிருந்தால் இரத்து நீக்கம் செய்யப்படவேண்டும். மூன்று மாதத்திற்கு பிறகு பெறப்பட்ட இரத்து நீக்க கோரிக்கை

ஏதும் ஏற்கப்படக்கூடாது. அத்தகைய இனங்களின் பட்டியல் தயார் செய்து விதிமுறைப்படி மறு ஒதுக்கீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

3) இனிவரும் காலங்களில் வாரிய/தன்னிறைவு திட்டங்களில் அனைத்து பிரிவுகளிலும் மாதத் தவணை நிலுவை செலுத்தாத காரணத்தால் இரத்து செய்யப்படும் ஒதுக்கீடுகளுக்கு இரத்து செய்யப்பட்ட பின் மூன்று மாத காலத்திற்குள் இரத்து நீக்கம் கோரி, நிலுவைத் தொகை மற்றும் இரத்து நீக்கக் கட்டணம் செலுத்தினால் சம்பந்தப்பட்ட கோட்ட // பிரிவு செயற்பொறியாளர்கள்/மேலாளர் அவர்களே விதிமுறைகளைப் பின்பற்றி இரத்து நீக்கம் செய்யலாம். அதற்கு பிறகு எவ்வித இரத்து நீக்க கோரிக்கையும் ஏற்கப்படக்கூடாது. இந்த கால அவகாசம் குறித்து இரத்து ஆணையில் ஒதுக்கீடுதாரர்களுக்கு தெளிவாக தெரிவிக்கப்படவேண்டும்.

மூன்று மாத காலத்திற்குள் இரத்து நீக்கம் செய்யப்படாத இனங்களின் மறு ஒதுக்கீடு குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மேற்கண்ட வழிமுறைகளை முறையாக கடைபிடித்து உரிய மேல் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்த கோட்ட / பிரிவு செயற்பொறியாளர்கள் மேலாளர்கள் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இச்சுற்றறிக்கை குறிப்பாணையைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பம்.கே.என்.வெங்கட்ரமணன்
மேலாண்மை இயக்குநர்

இணைப்பு: வாரிய கூட்டக் குறிப்பு

பெறுநர்
அனைத்து கோட்ட / பிரிவு
செயற்பொறியாளர்கள்
மேலாளர் விற்பனை மற்றும் ஒதுக்கீடு சேவை

நகல்:

அனைத்து சரக மேற்பார்வை பொறியாளர்கள்
வாரிய ஒதுக்கீடு பிரிவின் பிரிவு அலுவலர்கள்
கண்காணிப்பாளர்கள்/உதவியாளர்கள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

(ஓம்)
உதவி செயலாளர் (ஒதுக்கீடு)

Verified RealEstate™

இனம் எண்.9.04
11/2001

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
வாரியத்திற்கான குறிப்பு

பொருள்: தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - ஒதுக்கீடு - வாரிய மற்றும் தன்னிறைவு வீட்டுமனைத் திட்டங்களில் மாதத் தவணை நிலுவையில் உள்ளதால் இரத்து செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் இரத்து நீக்கம் செய்வது சம்பந்தமாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை பொதுவான முடிவெடுப்பது சம்பந்தமாக குறிப்பு வைக்கப்பட்டது - வாரியம் தீர்மானித்தவாறு மேலும் விவரங்களுடன் முடிவெடுப்பது சம்பந்தமான மீண்டும் சமர்ப்பிக்கப்படுகிறது.
கோப்பு எண். ஒதுக்கீடு 2(5)/6858/2000)

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் மாதத் தவணை நிலுவைத் தொகை செலுத்தாததால் இரத்து செய்யப்பட்ட ஒதுக்கீடுகளை தக்க வைத்துக் கொள்ள ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து இரத்து ஆணை பெறப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் கோரிக்கை பெறப்பட்டால் சம்பந்தப்பட்ட கோட்ட செயற்பொறியாளரே இரத்து நீக்க ஆணை பிறப்பிக்கலாமென்றும் மற்ற நிகழ்வுகளில் வாரித் தலைவரின் ஆணை பெறப்பட வேண்டுமென்று வாரியச் சுற்றறிக்கை குறிப்பாணை எண்.ஆர்.1/10460-ஏ/82 நாள் 24.05.1983-மூலம் ஆணை வழங்கப்பட்டது.

தன்னிறைவு வீட்டுமனைத் திட்ட (எஸ் & எஸ் திட்டம்) ஒதுக்கீடுகள் சம்பந்தப்பட்ட அரசாணை (நிலை) எண்.871 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 27.05.91-ல் இரத்து நீக்கம் சம்பந்தமாக கீழ்காணும் விதிமுறைகள் கூறப்பட்டுள்ளன.

"இரத்து செய்யப்பட்ட 3 மாத காலத்திற்குள் இரத்து நீக்க கோரிக்கை பெறப்பட்டால் இரத்து நீக்கம் செய்யலாமென்றும் அதற்கு மேல் பெறப்பட்டால் பரிசீலிக்கத் தேவையில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது."

ஒதுக்கீடுதாரர்கள் ஒரு மாத காலத்திற்கு பின்பு இரத்து நீக்கக் கட்டணத்துடன் மாதத் தவணை நிலுவைத் தொகையை செலுத்த முன்வரும்போது வாரிய ஆணை பெற பிரேரணை அனுப்பி ஆணை பெறும்வரை காத்திருப்பதால் மனைக்காக பணம் செலுத்த வரும் ஒதுக்கீடுதாரர்களிடம் உடனடியாக வசூல் செய்ய முடியவில்லை என்பதால் இந்த காலதாமதத்தினை தவிர்த்திடும் வகையில் ஒதுக்கீடுதாரர்கள் ஒதுக்கீட்டிற்கான நிலுவையினை செலுத்தவில்லை என்ற காரணத்திற்காக ஒதுக்கீடு இரத்து செய்யப்பட்டால் இந்த ஒதுக்கீடு இரத்து ஆணையை திரும்பப் பெறும் அதிகாரம் அனைத்து கோட்ட / பிரிவு செயற்பொறியாளர்கள்/ஒதுக்கீடு சேவை மேலாளர்களுக்கும் வாரிய சுற்றறிக்கை குறிப்பாணை எண். ஒதுக்கீடு4(2)/40012/98 நாள் 30.07.98 மூலம் வழங்கப்பட்டது. இதில் காலவரை ஏதும் குறிப்பிடப்படவில்லை.

மேற்படி குறிப்பாணைப்படி இரத்து நீக்க ஆணை பிறப்பிக்கப்பட்ட சில இனங்களை ஆய்வு செய்தபோது அந்த ஆணை பல விதங்களில் துற்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்தால் இந்த ஆணையில் மாற்றம் செய்ய சுற்றறிக்கை குறிப்பாணை எண். ஒதுக்கீடு 2(5)/5858/2000 நாள் 13.04.2001-இல் கீழ்கண்டவாறு சலுகை வெளியிடப்பட்டது.

தன்னிறைவு திட்டங்களில் இரத்து செய்யப்பட்ட இனங்களை இரத்து நீக்கம் செய்யுமாறு ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து மூன்று மாதங்களுக்குள் கோரிக்கை பெறப்பட்டால் நிலுவைத் தொகை, வட்டி, இரத்து நீக்கக் கட்டணம் வசூலித்து பின்னர் சம்பந்தப்பட்ட கோட்டப் பொறியாளர்/மேலாளர் விற்பனை மற்றும் ஒதுக்கீடு சேவை அவர்களே இரத்து நீக்க ஆணை பிறப்பிக்கலாம்.

இவ்வாறு இரத்து நீக்க கோரிக்கை பெறப்படாத இனங்களில் மறு ஒதுக்கீடு குறித்து எஸ் & எஸ் கமிட்டியின் மூலம் பொருள் நிரல் வைத்து முடிவெடுத்து செயல்படவேண்டும் என்றும்,

வாரியத் திட்டங்களில் மேற்கூறியவாறு 3 மாதங்களுக்குள் கோரிக்கை பெறப்படவில்லையென்றால் இந்த இனங்களின் மறு ஒதுக்கீடு குறித்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் இதில் வேறு பிரச்சனைகள் எதிர்ப்பட்டால் வாரியத்திற்கு கருத்துரு அனுப்பி மேலாண்மை இயக்குநர் அவர்கள் ஆணை பெறப்படவேண்டுமென்றும் சுற்றறிக்கை வழங்கப்பட்டது.

வாரியத்தில் ஒதுக்கீடு பெற்று நீண்ட காலமாக தவணைத் தொகை செலுத்தாமல் இருந்த ஒதுக்கீடுகள் இரத்து நீக்கம் செய்யப்படுவதால் ஏற்படும் இழப்பை தடுக்கவும் மற்றும் இரத்து நீக்கம் செய்வதற்கு ஒரு கால வரையறை நிர்ணயிக்கவும் நாள் 13.04.2001 நாளிட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

தன்னிறைவு திட்டங்களில் பல ஒதுக்கீடுதாரர்கள் கொடுத்த மனுவில் குடும்ப சூழ்நிலை காரணமாக மாதத்தவணை செலுத்த இயலாமல் போகின்றது என்றும் இதற்காக இரத்து செய்தால் அவர்களுக்கு ஒரு பெரும் சுமையாக இருக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

தன்னிறைவு வீட்டு மனைத் திட்ட ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து பெறப்பட்ட பல மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டு இரத்து நீக்கம் குறித்த கீழ்க்காணும் வழிமுறை வகுக்கலாம் என்று கருத்துரு வாரியத்தின் மூலம் வைக்கப்பட்டது.

1) இதுவரை வாரிய/தன்னிறைவு திட்டங்களில் தவணை நிலுவை காரணமாக இரத்து செய்யப்பட்டு இன்றைய தேதி வரை இரத்து நீக்கம் செய்யப்படாத அனைத்து இனங்களுக்குரிய ஒதுக்கீடுதாரர்களுக்கும் ஒரு மாத காலம் அவகாசம் கொடுத்து நிலுவை வட்டி மற்றும் இரத்து நீக்க கட்டணம் செலுத்தினால் இரத்து நீக்கம் செய்திடலாம்.

2) ஒரு மாத காலம் முடிவுற்ற பின்னர் அதற்கும் நிலுவைத் தொகையினை வட்டி மற்றும் இரத்து நீக்கக் கட்டணத்துடன் செலுத்திடாத இனங்கள் அனைத்தினையும் மறு ஒதுக்கீடு செய்திட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

3) இனிவரும் காலங்களில் வாரிய/தன்னிறைவு திட்டங்களில் மாதத் தவணை நிலுவை காரணமாக இரத்து செய்யப்பட்டால் ஒதுக்கீடுதாரருக்கு முறையாக இரத்து ஆணை அஞ்சல் செய்யப்படவேண்டும். இதில் காலதாமதம் இருக்கக்கூடாது. ஒதுக்கீடுதாரர் இரத்து ஆணை பிறப்பிக்கப்பட்ட பின் 3 மாத காலத்திற்குள் நிலுவையை செலுத்தி இரத்து நீக்கம் பெற வேண்டும். இல்லையென்றால் 3 மாத காலம் முடிவுற்றவுடன் மறு ஒதுக்கீடு குறித்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

தன்னிறைவு திட்டங்களில் அடுத்து நடைபெறும் எஸ் & எஸ் கமிட்டி கூட்டத்தில் வைத்து ஒப்புதல் பெற்று மறு ஒதுக்கீடு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இரத்து நீக்கம் செய்வது சம்பந்தமாக மேற்கூறப்பட்டுள்ள வழிமுறைகளை கடைபிடிப்பது குறித்து முடிவெடுக்கும் பொருட்டு குறிப்பு வாரியக் கூட்டத்தின் முன் 10/2001-ல் வைக்கப்பட்டது.

வாரியத்தின் கீழ்காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் எண்.9.06 நாள் 30.10.2001.

> "ஒத்திவைக்கப்பட்டது. இரத்து செய்யப்பட்டுள்ள மனைகளின் எண்ணிக்கை மற்றும் இரத்து நீக்கம் கோரும் மனைகளின் எண்ணிக்கை பற்றிய முழு விவரங்களுடன் வாரியக் கூட்டத்தில் மீண்டும் வைக்குமாறு வாரியம் பணித்தது".

மேற்படி தீர்மானத்தின்படி கோட்டங்களிலிருந்து பெறப்பட்ட விவரம் பின்வருமாறு:

Verified RealEstate™

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
இரத்து செய்யப்பட்ட மனைகளின் விவரப்பட்டியல்

சரகம் மற்றும் கோட்டம்	மனைகளின் வகை	இரத்து செய்யப்பட்ட மனைகளின் எண்ணிக்கை	இரத்து நீக்கம் கோரி பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை	இரத்து செய்யப்பட்ட பின்னும் மாதத் தவணை செலுத்துவோரின் எண்ணிக்கை	இரத்து செய்யப்பட்ட காலம் (இரத்து நீக்கம் செய்ததில் இருந்து இன்று வரை உள்ள மனைகளின் எண்ணிக்கை)				
(1)	(2)	(3)	(4)	(5)	(6)				
					(1)	(2)	(3)	(4)	(5)
அண்ணா நகர் சரகம்									
அண்ணா நகர் கோட்டம்		இல்லை	..	..	..	..	..	..	..
கொரட்டூர் கோட்டம்	பொ.ந.பி.'ஏ'	இல்லை	..	..	..	..	..	..	..
	பொ.ந.பி.'பி'	இல்லை	..	..	..	..	..	..	..
	கு.வ.பி.	இல்லை	..	..	..	..	..	..	..
	ம.வ.பி.	1	1	..	..	..	1	..	..
		1	1				1		

(1)	(2)	(3)	(4)	(5)	(6)				
					(1)	(2)	(3)	(4)	(5)
சிறப்புக் கோட்டம் 1 (முகப்பேர் ஏரி திட்ட	கு.வ.பி.	22	1	11	..	..	..	11	11
ஒதுக்கீடுதாரர்கள் வித்தியாசத் தொகை	ம.வ.பி.	18	..	10	..	..	..	10	8
செலுத்துவதை எதிர்த்து, ஒதுக்கீடுதாரர்கள் வழக்கு தொடர்ந்து உள்ளனர்)	உ.வ.பி.	7	..	3	..	..	..	3	4
மொத்தம்	47	1	24	..	..	..	..	24	23
			(வித்தியாசத் தொகை செலுத்துகிறவர்கள்						(தொகை செலுத்தாத வர்கள்)
சென்னை சரகம் சிறப்புக் கோட்டம் 3	பொ.ந.பி.'ஏ'	340	8	340	..	..	..	..	340
	பொ.ந.பி.'பி'	296	5	296	..	..	..	..	290
"Board resolved to approve the rates based on the guideline value or market value whichever is higher as upset price for auction. The Board further resolved that all sales will be subject to confirmation by the Board.

Sd/- Chairman, TNHB.

//TRUE COPY//

Sd ( )
A.E.E. (Spl.Cell)

4

ABSTRACT

Tamil Nadu Housing Board - Conversion of unsold Commercial, Schools and other Public purpose sites into suitable, saleable categories and to dispose them in accordance with the prevailing market rates-orders-issued.

HOUSING AND URBAN DEVELOPMENT (HB5) DEPARTMENT

G.O.Ms.No.263 Dated : 22.10.2003

Read again :-

1. G.O.Ms.No.839, Housing & U.D, dated 06.10.1993.
2. G.O.Ms.No.622, Housing & U.D, dated 26.09.1994.
3. G.O.Ms.No.209, Housing & U.D, dated 20.08.2002.
4. G.O.Ms.No.23, Housing & U.D, dated 13.01.1997.

Read Also :-

5. From the Managing Director, Tamil Nadu Housing Board, D.O.Lr.No.Allotment 2(7)/45883/03, dated 28.08.2003.

ORDER :

Tamil Nadu Housing Board has been following certain guide lines in fixing the upset price of the Commercial, School and other public purpose sites based on the Government orders for selling them through sealed offer cum open auction. The following procedures are being adopted by the Tamil Nadu Housing Board for fixing the upset prices of commercial school and other public purpose sites.

2. **COMMERCIAL SITES :** In G.O.Ms.No.839, Housing and Urban Development Department, dated 06.10.1993. The upset price of the commercial sites/shop sites are fixed as follows:-

a) **Located in 60' and above road**
To be allotted in auction only after fixing the upset price at 75% over and above the ruling rate for residential plot.

b) **Located in 80' and above road**
To be allotted in auction only after fixing the upset price at 100% over and above the ruling rate for residential plot.

c) **However if the plot is a corner plot 10% will be added to the cost.**

3. **SCHOOL SITES :** With reference to G.O.Ms.No.622, Housing and Urban Development Department, dated 26.09.1994, and G.O.Ms.No.209, Housing and Urban Development Department, dated 20.08.2002 the upset price may be fixed at 1.75 times the ruling residential rate per ground in the year of allotment under each area in Madras City and at 1.20 times the ruling residential rate in Mofussil area and the sites be allotted to the highest bidder in the tender cum open auction. The successful bidders will have to pay only 50% of the site cost on the condition that 50% of the site extent allotted shall be kept as open space for play ground and will be open to public. No compound wall shall be permitted to be raised in the 50% open space so that free access to public shall be available. If the entire school site is desired to be

Verified RealEstate™

used by the allottee educational institution, then, they should pay the cost for the entire site. However, the Government in its order G.O.Ms.No.209, Housing and Urban Development Department, dated 20.08.2002 has ordered among other things that the bidder should pay for the 100% land extent instead of 50% and the 50% of the land extent should be kept open as play space.

4. **PUBLIC PURPOSE SITES** : In G.O.Ms.No.23, Housing and Urban Development Department, dated 13.01.1997 the public purpose sites are being allotted for construction of orphanage houses, working women's hostel, private nursing home, temple, church, mosque, recreation center, Medical Center, Hospital and Residential Association of the Tamil Nadu Housing Board Scheme etc. The Government order stipulates that the limited tender-cum-auction system may be resorted to and the upset price rate may be fixed at 1.75 times the ruling residential rate per ground in the year of allotment under each area in Chennai city and that 1.2 times the ruling residential rates in Mofussil area and the site to be allotted to the highest bidder in the tender-cum-auction subject to allotment condition. The Earnest Money Deposit under the Tender-cum-auction system be fixed to Rs.5,000/-

5. The above conditions of fixing premium for the sale of commercial, school and public purpose sites are found detrimental for the disposal of the above unsold sites.

6. Due to slump in the real estate market, many of the commercial, school and other public purpose sites are remaining unsold in the schemes developed by Tamil Nadu Housing Board throughout Tamil Nadu. In view of the huge capital locked up, the allotment procedure to dispose of these sites has to be reconsidered so that the above sites could be sold.

7. The above subject was taken for discussion by Hon'ble Chief Minister on 31.07.2003. During the discussion Tamil Nadu Housing Board request for the conversion of commercial, school and other public purpose sites into suitable salable categories and to dispose them by keeping in mind the market rates prevailing for such categories was agreed to.

8. As per Government letter No.40285/K2/80-1, Housing and Urban Development Department, dated 15.10.1980, the Tamil Nadu Housing Board should not convert the sites earmarked in the layout for public purpose like schools, play grounds, parks etc. into residential site without prior permission/order of the Government and that Tamil Nadu Housing Board should not also initiate the action to send such proposals for change of classification direct to the Chennai Metropolitan Development Authority or Director of Town and Country Planning for approval.

9. In order to convert the unsold commercial, school and other public purpose sites into saleable categories and to dispose them in accordance with the prevailing market rates, the Managing Director, Tamil Nadu Housing Board, has requested the orders of Government in the following:-

i) For issue of suitable amendments to Government orders specified in paras 2,3 and 4 above in respect of commercial, school and public purpose sites etc. in order that no premium is levied and keeping in mind that the sites shall be sold in accordance with prevailing market rates.

VerifiedJ RealEstate

ii) To authorise Tamil Nadu Housing Board to take suitable action for conversion of unsold commercial, school and other public purpose sites without seeking the Government orders.

10. The Government have examined the proposal referred to in para 9 above and after careful consideration, pass the following orders:-

i) The Government direct that the Government orders specified in paras 2,3 and 4 are amended, in order that no premium is fixed. The Government also direct that the sites shall be sold keeping in mind the prevailing market rates.

ii) The Government hereby permit the Tamil Nadu Housing Board to take suitable action for conversion of unsold, commercial school and other public purpose sites which are unutilised without seeking the orders of Government.

iii) The Tamil Nadu Housing Board is however, directed to obtain approval of their Board in respect of each case.

(By Order of the Governor)

LAL RAWNA SAILO
SECRETARY TO GOVERNMENT

To

The Managing Director, Tamil Nadu Housing Board, Chennai-35.
SF/FC

//Forwarded By Order//

Sd ( )
SECTION OFFICER

Verified RealEstate

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை - 35.
செயல்முறை ஆணை.

முன்னிலை : திரு.ந. வாசுதேவன், இ.ஆ.ப.,

எண்.விமபி 4 / 4428 / 2001 நாள் : 7.3.2001

பொருள் : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் - விலை மதிப்பீட்டு பிரிவு - வீட்டு பயன்பாட்டு மனை மற்றும் காலியாக உள்ள மனைகளின் 2001-2002ம் ஆண்டிற்கான நடைமுறை விற்பனை விலை நிர்ணயித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை : வாரியத் தீர்மானம் எண்.6.02 நாள் 1.3.2001.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், வீட்டு பயன்பாட்டு மனை மற்றும் காலியாக உள்ள மனைகளுக்கு 2001 - 2002ம் ஆண்டிற்கான நடைமுறை விற்பனை விலை (ரூலிங் ரேட்) நிர்ணயம் செய்வதற்கான கருத்துரு 1.3.2001 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தில் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டது. வாரியத் தீர்மானம் எண்.6.02 நாள் 1.3.2001ல் இந்தக் கருத்துருவிற்கு வாரியம் ஒப்புதல் அளித்தது.

மேற்கண்ட தீர்மானத்திற்கு ஏற்ப, 2001-2002ம் ஆண்டிற்கான நடைமுறை விற்பனை விலை (ரூலிங் ரேட்) அட்டவணை-1ல் இணைக்கப்பட்டுள்ளது. இந்த விலை 1.4.2001 முதல் அமுலுக்கு வருகிறது.

இந்த நடைமுறை விற்பனை விலையுடன் 60 அடி சாலை, 80 அடி சாலை, 100 அடி சாலை மற்றும் 120 அடி சாலைகள் மற்றும் மூலைகளில் அமைந்துள்ள வீட்டு பயன்பாட்டு மனை (ம) காலியாக உள்ள மனைகள் மற்றும் வியாபார மனைகளும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒதுக்கீடு விதிகளின்படி கூடுதல் தொகையை சேர்த்து விலையை நிர்ணயித்துக் கொள்ளவும்.

மேலும் இந்த செயல்முறை ஆணையை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை அனுப்பும்படி அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு : அட்டவணை - 1.

ஒம்/- ந. வாசுதேவன்
மேலாண்மை இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து மேற்பார்வை பொறியாளர் / செயற் பொறியாளர் / செயற் பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர் / மேலாளர் விற்பனை (ம) சேவை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்.
2. மேலாண்மை இயக்குநரின் நேர்முக உதவியாளர்.
3. செயலர் (ம) பணியாளர் அலுவலரின் நேர்முக எழுத்தர்.
4. நிதி ஆலோசகரின் நேர்முக எழுத்தர்.
5. தலைமைப் பொறியாளரின் நேர்முக எழுத்தர்.
6. மேற்பார்வை பொறியாளர் (தலைமையகம்), த.நா.வீ.வ. வாரியம்.
7. வாரியத்தில் உள்ள அனைத்து அலுவலர்கள்.
8. வாரியத்தில் உள்ள அனைத்துப் பிரிவுகள்.

// உத்திரவின்படி அனுப்பப்படுகிறது //

(ஒம்)
கோட்டக் கணக்கர்.

Verified RealEstate

அட்டவணை - 1

2001 - 2002ம் ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட வீட்டு மனை விற்பனை விலை

வ. எண்.	திட்டத்தின் பெயர்	2000 - 2001ம் ஆண்டிற்கான நடைமுறை விற்பனை விலை ஒரு கிரவுண்டிற்கு	ஒப்புதல் அளிக்கப்பட்ட 2001-2002ம் ஆண்டிற்கான நடைமுறை விற்பனை விலை (ஒரு கிரவுண்டிற்கு) (1.4.2001 முதல்)
1.	2.	3.	4.
1.	அண்ணா நகர், சென்னை	6,11,000	7,03,000
2.	அண்ணா நகர், மேற்கு விரிவாக்கம், சென்னை.	6,11,000	7,03,000
3.	வியாசர்பாடி, சென்னை.	5,99,000	6,89,000
4.	நொளம்பூர், சென்னை	11,32,000	13,02,000
5.	மொகப்பேர், சென்னை	3,60,000	4,14,000
6.	மாதவரம், சென்னை	3,43,000	3,95,000
7.	கொரட்டூர், சென்னை	5,99,000	6,89,000
8.	பெரியகுப்பம், திருவள்ளூர் (நிலத்தின் விலை மட்டும்)	22,000	26,000
9.	திருமுல்லைவாயல், பகுதி - 1	1,90,000	2,19,000
10.	திருமுல்லைவாயல், பகுதி - 2	3,01,000	3,47,000
11.	த.வ.ம. (எப்.டி.இசட்) தாம்பரம், பகுதி - 3, சென்னை	5,15,000	5,93,000
12.	கும்மிடிபூண்டி	2,46,000	2,83,000
13.	கொளத்தூர்,சென்னை	2,35,000	2,71,000
14.	மதுரவாயல், சென்னை	3,10,000	3,57,000
15.	மதுராந்தகம், சி.ந.ந.,	1,98,000	2,28,000
16.	க.க.நகர், சென்னை	6,11,000	7,03,000
17.	சலவையாளர் திட்டம், சைதாப்பேட்டை, சென்னை	3,30,000	3,80,000
18.	தமிழ் நகர், இராமாபுரம், சென்னை	11,86,000	13,64,000
19.	குறிஞ்சி நகர், இராமாபுரம், சென்னை	11,56,000	13,30,000
20.	ஈஸ்வரன் நகர், இராமாபுரம், சென்னை	14,24,000	16,38,000
21.	அழகாபுரி நகர், இராமாபுரம், சென்னை	13,92,000	16,01,000
22.	ஜாபர்கான்பேட்டை, சென்னை	6,11,000	7,03,000
23.	மாம்பலம் குளக்கரைச் சாலை, சென்னை	9,87,000	11,36,000
24.	சீத்தம்மாள் விரிவாக்கம், சென்னை	6,79,000	7,81,000
25.	கோட்டூர்புரம், சென்னை	8,28,000	9,53,000
26.	அசோக் நகர், சென்னை	6,06,000	6,97,000
27.	தென் சென்னை பு.ந.தி. (சாஸ்திரி நகர், பெசன்ட் நகர், இந்திரா நகர்)	6,11,000	7,03,000
28.	பெசன்ட் நகர் விரிவு, பகுதி - 1, சென்னை	8,19,000	9,42,000

29.	திருவான்மியூர், சென்னை	6,11,000	7,03,000
30.	திருவான்மியூர் விரிவு, சென்னை	12,57,000	14,46,000
31.	தெ.ஆ.கூ.வி. கிராமம், கோயம்பேடு, சென்னை	22,31,000	25,66,000
32.	வேலூர், பகுதி - 1	2,15,000	2,48,000
33.	வேலூர், பகுதி - 2	2,15,000	2,48,000
34.	வேலூர், பகுதி - 3	2,42,000	2,79,000
35.	வேலூர், பகுதி - 4	1,92,000	2,21,000
36.	ஆம்பூர், பகுதி - 1, வேலூர் மாவட்டம்	16,84,000	19,37,000
37.	ஆம்பூர், பகுதி - 2, வேலூர் மாவட்டம்	14,11,000	16,23,000
38.	இராணிபேட்டை, வேலூர் மாவட்டம்	3,29,000	3,79,000
39.	ஆரணி, சி.ந.ந. வேலூர் மாவட்டம்	1,60,000	1,84,000
40.	போளூர் சி.ந.ந. வேலூர் மாவட்டம்	2,22,000	2,56,000
41.	பச்சாங்குப்பம், கடலூர் மாவட்டம்	1,77,000	2,04,000
42.	அரக்கோணம் பு.ந.தி. வேலூர் மாவட்டம்	4,08,000	4,70,000
43.	ஆற்காடு பகுதி - 1, வேலூர் மாவட்டம்	1,42,000	1,64,000
44.	காஞ்சிபுரம், பகுதி - 1	1,88,000	2,17,000
45.	வாலாஜா, வேலூர் மாவட்டம்	1,81,000	2,09,000
46.	செங்கம் சி.ந.ந. திருவண்ணாமலை மாவட்டம்	1,26,000	1,45,000
47.	காவேரிபாக்கம் சி.ந.ந. வேலூர் மாவட்டம்	1,52,000	1,75,000
48.	சோளிங்கர் சி.ந.ந.	89,000	1,03,000
49.	விருபாக்ஷிபுரம், தருமபுரி	2,55,000	2,94,000
50.	பழைய கோயில் நிலம், ஓசூர், பகுதி - 1	74,000	86,000
51.	தளி சாலை, ஓசூர், பகுதி - 2	1,50,000	1,73,000
52.	பாகலூர் சாலை, பகுதி - 3, ஓசூர்	2,24,000	2,58,000
53.	ஓசூர், பகுதி - 4	3,53,000	4,06,000
54.	ஓசூர், பகுதி - 8	3,79,000	4,36,000
55.	ஓசூர், பகுதி - 9	1,73,000	1,99,000
56.	அ.ச.போ.க.திட்டம், ஓசூர், பகுதி - 12 (எ.எஸ்.டி.சி.)	2,15,000	2,48,000
57.	இராயக்கோட்டை சாலை, ஓசூர், பகுதி - 14	62,000	72,000
58.	ஊத்தங்கரை, தருமபுரி மாவட்டம்	1,49,000	1,72,000
59.	தருமபுரி பு.ந.தி.,	1,83,000	2,11,000
60.	கிருஷ்ணகிரி, பகுதி - 1	1,73,000	1,99,000
61.	கிருஷ்ணகிரி, பகுதி - 2	97,000	1,12,000
62.	பர்கூர், சி.ந.ந. தருமபுரி மாவட்டம்	1,80,000	2,07,000
63.	பாலக்கோடு, தருமபுரி மாவட்டம்	1,37,000	1,58,000
64.	அரூர், சி.ந.ந., தருமபுரி மாவட்டம்	91,000	1,05,000
65.	காவேரிப்பட்டணம், தருமபுரி மாவட்டம்	1,42,000	1,64,000
66.	திருப்பூர், கோவை	3,32,000	3,82,000

67.	கோவைப்புதூர், கோவை	3,14,000	3,62,000
68.	குன்னூர்	2,32,000	2,67,000
69.	பொள்ளாச்சி	1,73,000	1,99,000
70.	குறிச்சி பு.ந.தி., பகுதி - 1	2,92,000	3,36,000
71.	குறிச்சி பகுதி - 2	1,83,000	2,11,000
72.	உடுமலைப்பேட்டை	3,51,000	4,04,000
73.	பேரூர் சாலை தென் பகுதி, கோவை	8,03,000	9,24,000
74.	பேரூர் சாலை வடக்கு பகுதி, கோவை	3,36,000	3,87,000
75.	கவுண்டம்பாளையம், கோவை	2,71,000	3,12,000
76.	உடுமலைப்பேட்டை, சி.ந.ந., கோவை	1,69,000	1,95,000
77.	செய்யூர், அவினாசி வட்டம், கோவை	74,000	86,000
78.	கோயம்புத்தூர், சீரநாயக்கன்பாளையம்	4,28,000	4,93,000
79.	கணபதி, பகுதி-2, கோயம்புத்தூர்	1,52,000	1,75,000
80.	கணபதி, புந.தி., பகுதி - 3, கோவை	10,52,000	12,10,000
81.	சௌரிபாளையம், கோயம்புத்தூர்	6,08,000	7,00,000
82.	உப்பிலிபாளையம், கோவை	6,24,000	7,18,000
83.	இராக்கிபாளையம், கோவை	1,54,000	1,78,000
84.	சிக்கதாசன்பாளையம், கோ.வி.பி., பு.ந.தி.,	10,05,000	11,56,000
85.	கோபிசெட்டிபாளையம், ஈரோடு	3,86,000	4,44,000
86.	சம்பத் நகர், ஈரோடு	11,78,000	13,55,000
87.	பெரியார் நகர், ஈரோடு	16,30,000	18,75,000
88.	கொள்ளம்பாளையம், பகுதி - 2, ஈரோடு	1,80,000	2,07,000
89.	பெருந்துறை, சி.ந.ந.,	2,33,000	2,68,000
90.	சேலம், இராசிபுரம்	1,20,000	1,38,000
91.	சேலம், வெள்ளைகுட்டை ஏரி	2,91,000	3,35,000
92.	சேலம், இராஜாராம் குடியிருப்பு	90,000	1,04,000
93.	சேலம், இராஜாராம் நகர்	9,87,000	11,36,000
94.	தாதகாபட்டி, சேலம்	10,09,000	11,61,000
95.	மேட்டூர், சேலம்	2,05,000	2,36,000
96.	அன்னதானபட்டி, சேலம்	2,27,000	2,62,000
97.	தாத்தம்பட்டி, சேலம்	1,08,000	1,25,000
98.	கந்தம்பட்டி, சேலம்	14,15,000	16,28,000
99.	அய்யம்பெருமாள்பட்டி, சேலம்	1,37,000	1,58,000
100.	சங்ககிரி, சி.ந.ந. திட்டம்	1,08,000	1,25,000
101.	எடப்பாடி, சி.ந.ந. திட்டம்	29,46,000	33,88,000
102.	கடச்சநல்லூர், நாமக்கல் மாவட்டம்	3,07,000	3,54,000
103.	திருச்செங்கோடு, பகுதி - 1, கட்டப்பள்ளி	1,88,000	2,17,000

104.	திருச்செங்கோடு, பகுதி - 2, நாமக்கல் மாவட்டம்	3,51,000	4,04,000
105.	திருச்செங்கோடு, பகுதி -1, சி.பு.ந.தி., நாமக்கல் மாவட்டம்	6,25,000	7,19,000
106.	திருச்செங்கோடு, பகுதி - 3, சி.பு.ந.தி., நாமக்கல் மாவட்டம்	5,01,000	5,77,000
107.	நாமக்கல், பகுதி - 1	7,63,000	8,78,000
108.	நாமக்கல், பகுதி - 2	5,83,000	6,71,000
109.	பண்ருட்டி, சி.ந.ந., கடலூர் மாவட்டம்	1,15,000	1,33,000
110.	விருத்தாசலம்	2,05,000	2,36,000
111.	க.க.நகர், திருச்சி	6,11,000	7,03,000
112.	சாலை தெரு, திருச்சி	15,27,000	17,57,000
113.	துரையூர், திருச்சி	1,27,000	1,47,000
114.	மணப்பாறை, திருச்சி	1,50,000	1,73,000
115.	அரியலூர், திருச்சி	1,35,000	1,56,000
116.	முசிறி, சி.ந.ந., திருச்சி	1,37,000	1,58,000
117.	கரூர், பு.ந.தி.,	1,16,000	1,34,000
118.	புதுக்கோட்டை, பு.ந.தி., பகுதி - 1	1,26,000	1,45,000
119.	ஜீரனூர், புதுக்கோட்டை மாவட்டம்	1,16,000	1,34,000
120.	மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம்	1,96,000	2,26,000
121.	திருவாரூர், சி.ந.ந. திருவாரூர் மாவட்டம்	2,59,000	2,98,000
122.	பட்டுக்கோட்டை சி.ந.ந., தஞ்சாவூர் மாவட்டம்	1,73,000	1,99,000
123.	தேனி, பு.ந.தி.	1,82,000	2,10,000
124.	சிவகங்கை, மதுரை	95,000	1,10,000
125.	ஒட்டன்சத்திரம், சி.ந.ந.,	1,80,000	2,07,000
126.	எல்லிஸ் நகர், மதுரை (அரசாணை நிலை எண்.63 வீ.வ.ம.ந.பு. துறை நாள் 2.2.01ல் மதுரை எல்லிஸ் நகர் திட்டத்தில் 31.12.00 அன்று ஒரு கிரவுண்டு ரூ.6,32,630/- என விலை நிர்ணயம் செய்து ஆணை வெளியிட்டுள்ளது)	6,32,000	7,28,000
127.	பழனி, சி.ந.த.,	1,82,000	2,10,000
128.	திருமங்கலம், சி.ந.ந.,	1,66,000	1,91,000
129.	மதுரை கிழக்கு பு.ந.தி., (அ.அ.நகர் (ம) க.க.நகர்)	6,11,000	7,03,000
130.	மதுரை பு.ந.தி.,பிரிவு 1(ம) 2 (வெள்ளக்கால்வாய் செலவும் சேர்த்து)	2,86,000	3,29,000
131.	மதுரை பு.ந.தி.,பிரிவு (வெள்ளக்கால்வாய் செலவும் சேர்த்து)	2,68,000	3,09,000
132.	மதுரை பு.ந.தி., பிரிவு 4	2,97,000	3,42,000

Verified @ RealEstate TM

133.	மதுரை பு.ந.தி., பிரிவு 6 (வெள்ளக்கால்வாய் செலவும் சேர்த்து)	3,17,000	3,65,000
134.	ஆவணியாபுரம், மதுரை	7,35,000	8,46,000
135.	ஆவணியாபுரம், கரை திட்டம், மதுரை	4,39,000	5,05,000
136.	திண்டுக்கல், பகுதி - 1	3,51,000	4,04,000
137.	திண்டுக்கல், பகுதி - 2	2,90,000	3,34,000
138.	திண்டுக்கல், பகுதி - 3	2,15,000	2,48,000
139.	இராஜபாளையம், சி.ந.ந., விருதுநகர்	95,000	1,10,000
140.	காரைக்குடி, சி.ந.ந., சிவகங்கை	2,00,000	2,30,000
141.	சங்கராபேரி, திருநெல்வேலி	1,37,000	1,58,000
142.	திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம்	1,81,000	2,09,000
143.	பாளையங்கோட்டை, பகுதி - 1	64,000	74,000
144.	பாளையங்கோட்டை, பகுதி - 2	1,28,000	1,48,000
145.	பாளையங்கோட்டை, பகுதி - 3	1,26,000	1,45,000
146.	பாளையங்கோட்டை, பகுதி - 4	1,52,000	1,75,000
147.	பாளையங்கோட்டை, பகுதி - 5	5,31,000	6,11,000
148.	பாளையங்கோட்டை, பகுதி - 6	1,04,000	1,20,000
149.	வள்ளியூர், சி.ந.ந.,	1,47,000	1,70,000
150.	தேவகோட்டை	2,35,000	2,71,000
151.	சிவகாசி, பகுதி - 1	5,69,000	6,55,000
152.	செவ்வாய்பேட்டை, பகுதி - 1, திருவள்ளூர்	8,14,000	9,37,000
153.	எழும்பூர், சென்னை (16 உவபி குடியிருப்பு)	11,16,400	12,84,000
154.	டாடாபாத், கோயம்புத்தூர்	11,41,300	13,13,000
155.	கொட்டிவாக்கம் (புல எண்.239/ உபி (ம) 2ஸ்ரீ)	5,33,300	6,14,000
156.	மறைமலை நகர், நாகப்பட்டினம், தஞ்சாவூர்	1,74,000	2,01,000
157.	ஆணைகுப்பம், கடலூர்	3,55,000	4,09,000
158.	பள்ளிப்பாளையம், பகுதி - 2, சேலம்	4,27,000	4,92,000
159.	வேலம்பாளையம், திருப்பூர்	2,10,400	2,42,000

ஒம்/- மு. நக்கீரன்
விலை மதிப்பீட்டு கணக்கர்
(பொறுப்பு)

// உண்மை நகல் //

(ஒம்)
கோட்டக் கணக்கர்.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை - 35.
அவர்களின் செயல்முறை ஆணை.

முன்னிலை : திரு.கே.என். வெங்கட்டரமணன், இ.ஆ.ப.,

எண்.விமபி 4 / 5904 / 02 நாள் : 3.4.2002

பொருள் : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் – விலை மதிப்பீட்டு பிரிவு - வீட்டு மனை மற்றும் காலியாக உள்ள மனைகளுக்கு 2002-03 மற்றும் அடுத்து வரும் ஆண்டிற்கான நடைமுறை விற்பனை விலை நிர்ணயித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை : வாரியத் தீர்மானம் எண்.6.02 நாள் 22.3.2002.

ஆணை:-

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களில் நிலம் மற்றும் மேம்பாடு இறுதி விலை நிர்ணயம் செய்யப்பட்ட திட்டங்களுக்கு அந்தந்த திட்டங்களின் இறுதி விலையை ஒவ்வொரு நிதி ஆண்டிலும் வாரிய நடைமுறை வட்டி விகிதத்தை எடுத்து வட்டி முதலாக்கம் செய்து அடுத்து ஆயிரத்திற்கு கொண்டு வந்து வாரியத்தில் வைத்து ஒப்புதல் பெற்று அந்தந்த செயற் பொறியாளர் / மேற்பார்வை பொறியாளர் ஆகியோருக்கு தெரிவிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இந்த நிதி ஆண்டான 2002-03 மற்றும் இனிவரும் ஆண்டுகளில் இந்த நடைமுறையை மாற்றி இறுதி விலை நிர்ணயம் செய்யப்பட்ட அந்தந்த திட்டங்களில் புதிதாக விற்பனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலம், மனைப் பகுதிகளில் மற்றும் நீதிமன்ற உத்தரவின்படி பின்னர் எடுக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கு நடைமுறை விற்பனை விலை, வழிகாட்டி விலை (கைடு லைன் மதிப்பு) மற்றும் சந்தை விலை (மார்கெட் மதிப்பு) ஆகிய இவற்றை ஆராய்ந்து வாரியக் கூட்டத்தில் வைத்து விற்பனை விலை நிர்ணயம் செய்யலாம் என்ற கருத்துரு 22.03.02 அன்று நடைபெற்ற வாரியக் கூட்டத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டது.

வாரியத் தீர்மானம் எண்.6.02 நாள் 22.3.02ல் வாரியம் இக்கருத்துருவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

மேற்கண்ட தீர்மானத்திற்கு ஏற்ப இறுதி விலை நிர்ணயம் செய்யப்பட்ட திட்டங்களில் புதிதாக விற்பனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலம், மனைப் பகுதிகள் மற்றும் நீதிமன்ற உத்தரவின்படி பின்னர் எடுக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கு நடைமுறை விற்பனை விலை, வழிகாட்டி விலை (கைடு லைன் மதிப்பு) மற்றும் சந்தை விலை (மார்கெட் மதிப்பு) ஆகியவற்றை ஆராய்ந்து வாரியக் கூட்டத்தில் வைத்து விற்பனை விலை நிர்ணயம் செய்யப்படும்.

ஆகவே இறுதி விலை நிர்ணயம் செய்யப்பட்ட திட்டங்களில் புதிதாக விற்பனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலம், மனைப் பகுதிகள் மற்றும் நீதிமன்ற உத்தரவின்படி பின்னர் எடுக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கு ஒவ்வொன்றுக்கும் விலை நிர்ணயம் செய்வதற்காக கீழ்கண்ட விவரங்களுடன் அந்தந்த செயற் பொறியாளர் / செயற் பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர் மற்றும் மேற்பார்வை பொறியாளர் மூலமாக விரிவான பிரேரணை அனுப்பப்பட வேண்டும்.

1. விற்பனை செய்யப்பட வேண்டிய இடத்தின் பரப்பளவு (எப்.எம்.பி. வரைப்படத்துடன்)
2. இத்திட்டத்தின் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைப்படம் (விற்பனை செய்யப்பட உள்ள இடத்தினை வண்ணம் தீட்டி காட்டப்பட வேண்டும்)
3. வழிகாட்டி மதிப்பு (சார் பதிவாளரிடமிருந்து சான்றிதழ்)
4. சந்தை மதிப்பு (செயற் பொறியாளர் சான்றிதழ் அளிக்கப்பட வேண்டும்).
5. தற்பொழுது விற்பனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலம் / மனை என்ன விலைக்கு விற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
6. இந்த திட்டத்தில் உள்ள மனைகளில் கடைசியாக விற்கப்பட்ட நிலத்தின் விலை மற்றும் நாள் (ஒரு கிரவுண்டு 2,400 சதுர அடி).

வாரியத்தின் விற்பனை விலை நிர்ணயம் செய்த பின்பு தான், இவ்வகையான நிலம் / மனை விற்பனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென அனைத்து செயற்பொறியாளர் / மேற்பார்வை பொறியாளர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இந்த செயல்முறை ஆணையை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகையை அனுப்பவும்.

ஒம்/- கே.என்.வெங்கட்டரமணன்
மேலாண்மை இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து மேற்பார்வை பொறியாளர் / செயற் பொறியாளர் / செயற் பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர் / மேலாளர், விற்பனை (ம) சேவை, தநாவீவவா.
2. மேலாண்மை இயக்குநரின் நேர்முக உதவியாளர்.
3. செயலர் (ம) பணியாளர் அலுவலரின் நேர்முக எழுத்தர்.
4. நிதி ஆலோசகரின் நேர்முக எழுத்தர்.
5. தலைமைப் பொறியாளரின் நேர்முக எழுத்தர்.
6. மேற்பார்வை பொறியாளர் (தலைமையகம்), தநாவீவவா.
7. வாரியத்தில் உள்ள அனைத்து அலுவலர்கள்.
8. வாரியத்தில் உள்ள அனைத்துப் பிரிவுகள்.

// உத்திரவின்படி அனுப்பப்படுகிறது //

கோட்டக் கணக்கர்.

Verified By RedEstate™

எண். 6.02
3/2002

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

வாரியக் கூட்டக் குறிப்பு

பொருள் : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் - விலை மதிப்பீட்டுப் பிரிவு - வீட்டு மனை மற்றும் காலியாக உள்ள மனைகளுக்கு 2002 - 03 மற்றும் அடுத்து வரும் ஆண்டிற்கான நடைமுறை விற்பனை விலை நிர்ணயிக்க வாரியத்தின் முடிவிற்காக சமர்ப்பித்தல் - குறித்து.

(விமபி4 / 5904 / 2002)

வீட்டு வசதி வாரியத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களில், நிலம் மற்றும் மேம்பாடு இறுதி விலை நிர்ணயம் செய்யப்பட்ட திட்டங்களுக்கு, அந்தந்த திட்டங்களின் இறுதி விலையை, ஒவ்வொரு நிதி ஆண்டிலும் வாரிய நடைமுறை வட்டி விகிதத்தை எடுத்து வட்டி முதலாக்கம் செய்து, நடைமுறை விற்பனை விலையாக வாரியத்தில் வைத்து ஒப்புதல் பெற்று அந்தந்த செயற் பொறியாளர்கள் / மேற்பார்வை பொறியாளர்களுக்கு இதுவரை தெரிவிக்கப்பட்டு வந்தது. இதுவரை விற்பனைக்கு எடுத்துக் கொள்ளப்படாத நிலம் மற்றும் மனைப் பகுதிகளும் இந்த நடைமுறை விற்பனை விலையிலேயே விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இந்த நிதி ஆண்டு முதல் (2002-2003) இந்த நடைமுறையை மாற்றி இறுதி விலை நிர்ணயம் செய்யப்பட்ட அந்தந்த திட்டங்களில் புதிதாக விற்பனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலம், மனைப்பகுதிகள் மற்றும் நீதிமன்ற உத்தரவின்படி பின்னர் எடுக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றுக்கு, நடைமுறை விற்பனை விலை, வழிகாட்டி விலை (கைய்டு லைன் மதிப்பு) மற்றும் சந்தை விலை (மார்கெட் மதிப்பு) ஆகிய இவற்றை ஆராய்ந்து வாரியக் கூட்டத்தில் வைத்து விற்பனை விலை நிர்ணயம் செய்யலாம்.

மேற்கண்ட குறிப்பு வாரியத்தின் முடிவுக்காக வைக்கப்படுகிறது.

கே.என். வெங்கட்டரமணன்,
மேலாண்மை இயக்குநர்,
18.3.2002.

Resolution No. 6.02 **Dt. 22.03.2002**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

தலைவர்
த.நா. வீ.வ. வா.

(ஓம்)
கோட்டக்கணக்கர்

Verified RealEstate

குறிப்பாணை எண். ஒதுக்கீடு 1(1) / 13530/2002, நாள் : 14.05.2002

பொருள் : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் - ஒதுக்கீடு - முடிவுற்ற திட்டங்களில் முழுமையாக விற்றுப்போன குடியிருப்புகளில் ஏதோ ஒரு காரணத்தினால் பின்னாளில் ஒதுக்கீட்டை ரத்து செய்து திரும்பவும் ஒதுக்கீடு செய்யும் நிகழ்வுகளில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் - வாரிய தீர்மானம் - தொடர்பாக.

பார்வை : வாரிய தீர்மான எண். 9.03 நாள் 26.4.02.

வாரிய திட்டங்களில் குடியிருப்புகள் முறையாக விற்றது போக ஏதோ ஒரு காரணத்தினால் பின்னாளில் ஒதுக்கீட்டை ரத்து செய்து, திரும்பவும் ஒதுக்கீடு செய்யும் நிகழ்வுகளில் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து வாரிய தீர்மான எண்.9.03 நாள் 26.4.02-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வாரிய தீர்மானத்தின் நகல் ஒன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலத்தில் இவ்வாறான நிகழ்வுகளில் வாரிய தீர்மானத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கே.என். வெங்கட்டரமணன்
மேலாண்மை இயக்குநர்.

பெறுநர்

அனைத்து செயற் பொறியாளர் (ம)
நிர்வாக அலுவலர்.
" மேலாளர் (விற்பனை (ம) சேவை)
" ம.ஏ.ப்பி.
" வரி தணிக்கைப் பிரிவு
" ஒதுக்கீடு பிரிவு 2 & 3

// உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

உதவிச் செயலாளர்
(ஒதுக்கீடு)

Verified RealEstate™

இனம் எண்.9.03
4 / 02

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

வாரியக் கூட்டக் குறிப்பு

பொருள் : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் - ஒதுக்கீடு - முடிவுற்ற திட்டங்களில் முழுமையாக விற்றுபோன குடியிருப்புகளில் ஏதோ ஒரு காரணத்தினால் பின்னாளில் ஒதுக்கீட்டை ரத்து செய்து திரும்பவும் ஒதுக்கீடு செய்யும் நிகழ்வுகளில் கடைபிடிக்க வேண்டி ய நெறிமுறைகள் - தொடர்பாக.

(வாரியக் கோப்பு எண்.ஒதுக்கீடு 1 (1) / 13530 / 02)

பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு முழுமையாக விற்பனை செய்யப்பட்ட குடியிருப்பு திட்டங்களில் ஒன்றிரண்டு குடியிருப்புகளின் ஒதுக்கீடுகள் ஏதாவது ஒரு காரணத்தினால் (அதாவது நீதிமன்ற வழக்கு அல்லது ஒரே நபர் வாரியத் திட்டத்தில் இரண்டு ஒதுக்கீடு பெற்றது தொடர்பாக) ரத்து செய்யப்பட்டு, அவ்வாறு ஒதுக்கீடு உத்தரவு ரத்து செய்யப்பட்ட குடியிருப்புகளை விற்பனை செய்ய வாரியத்தின் உத்தரவு கேட்டு கோட்டங்களிலிருந்தும் / வீட்டு வசதி பிரிவுகளிலிருந்தும் கருத்துருகள் பெறப்படுகின்றன.

இவ்வாறான நிகழ்வுகளில் ரத்து செய்யப்பட்டு மீண்டும் அக்குடியிருப்புகளை எந்த முறையில் விற்பனை செய்ய வேண்டும் என்று தனியாக தற்போது வாரியத்தில் விதிமுறை ஏதுமில்லை.

தற்போது அவ்வாறு பெறப்படும் கருத்துகளுக்கு தனித்தனியாக அந்தந்த இருக்கையின் மூலம் கோப்புகளில் உத்தரவுகள் பெறப்பட்டு கோட்டங்களுக்கும் / வீட்டு வசதி பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

இது போன்று ஒவ்வொரு முறையும் தனித்தனியாக உத்தரவு வழங்குவதைத் தவிர்த்து ஒரே முறையை கடைபிடித்தால், காலியாகும் குடியிருப்புகளை உடனுக்குடன் விற்பனை செய்ய ஏதுவாகுவதுடன், வாரிய உத்தரவு பெற்று பதில் அனுப்ப ஏற்படும் கால தாமத்தை தவிர்க்கவும், அத்துடன் வாரியத்தின் வருமானம் கால தாமதமின்றி பெற இயலும். எனவே மேற்கண்ட நிகழ்வுகள் மூலம் காலியாகும் மனைகள் / வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்புகளை கீழ்க்கண்ட முறைப்படி விற்பனை செய்யலாம். இதற்கென்று வாரியத்தின் தனியான உத்தரவு பெறுவதை இதன் மூலம் தவிர்க்கலாம்.

1. முடிவுற்ற திட்டத்தில் காலியாகும் மனை / வீடு / குடியிருப்புகள் விலைக்குறைப்பு செய்யப்பட்டிருந்தால், விலை குறைப்பு செய்யப்பட்ட தேதியிலிருந்து மேற்கூறிய மனை / வீடு / குடியிருப்பு விற்பனை ஆகும் தேதி வரை வட்டி முதலாக்கம் செய்யப்பட்ட விலை, வாரிய நடைமுறை விலை, வழிகாட்டு விலை இவைகளில் எது அதிகமோ அவ்விலையை குறும விலையாக கொண்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தின் மூலம் வாரிய ஏல விதிமுறைகளின்படி விற்பனை செய்யப்பட வேண்டும்.

2. முடிவுற்ற திட்டத்தில் காலியாகும் மனை / வீடு / குடியிருப்பு விலை குறைப்பு திட்டத்தின் கீழ் இல்லையென்றால் வாரிய நடைமுறை மற்றும் வழிகாட்டு விலையில் எது அதிகமோ, அவ்விலையை குறும விலையாக கொண்டு (Upset Price) மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தின் மூலம் வாரிய ஏல விதிகளின்படி விற்பனை செய்யப்பட வேண்டும்.

VerifiedRealEstate

3. அவ்வாறான ஏலம் ஒரு முறையிடப்பட வேண்டும். ஏலத்தில் எவரும் பங்கு கொள்ளவில்லை என்றால் முதலில் வருவோருக்கு முதலில் என்ற அடிப்படையில் விற்கப்படலாம்.

மேற்கண்ட குறிப்புக்கு வாரியத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

கே.என். வெங்கட்ரமணன்
16.4.02
மேலாண்மை இயக்குநர்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
வாரிய தீர்மான எண்.9.03 நாள் 26.4.02

வாரியம் கீழ்க்கண்ட நெறிமுறைகளை கடைபிடிக்க ஒப்புதல் அளித்தது.

1. முடிவுற்ற திட்டத்தில் காலியாகும் மனை / வீடு / குடியிருப்புகள் விலைக்குறைப்பு செய்யப்பட்டிருந்தால், விலை குறைப்பு செய்யப்பட்ட தேதியிலிருந்து மேற்கூறிய மனை / வீடு / குடியிருப்பு விற்பனை ஆகும் தேதி வரை வட்டி முதலாக்கம் செய்யப்பட்ட விலை, வாரிய நடைமுறை விலை, வழிகாட்டு விலை இவைகளில் எது அதிகமோ அவ்விலையை குறும விலையாக கொண்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தின் மூலம் வாரிய ஏல விதிமுறைகளின்படி விற்பனை செய்யப்பட வேண்டும்.

2. முடிவுற்ற திட்டத்தில் காலியாகும் மனை / வீடு / குடியிருப்பு விலை குறைப்பு திட்டத்தின் கீழ் இல்லையென்றால் வாரிய நடைமுறை மற்றும் வழிகாட்டு விலையில் எது அதிகமோ, அவ்விலையை குறும விலையாக கொண்டு (Upset Price) மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தின் மூலம் வாரிய ஏல விதிகளின்படி விற்பனை செய்யப்பட வேண்டும்.

4. அவ்வாறான ஏலம் ஒரு முறையிடப்பட வேண்டும். ஏலத்தில் எவரும் பங்கு கொள்ளவில்லை என்றால் முதலில் வருவோருக்கு முதலில் என்ற அடிப்படையில் விற்கப்படலாம்.

ஒம்/- அ. நாகராஜன்,
தலைவர்.
த.நா.வீ.வ.வாரியம்.

// உண்மை நகல் //

கண்காணிப்பாளர்

Verified RealEstate ™

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

சுற்றறிக்கை குறிப்பாணை எண்.ஒதுக்கீடு 2(2) / 64332 / 2000

நாள் : 3.4.2001

பொருள் : ஒதுக்கீடு - ஒருங்கிணைப்பு - மனைகள் / தனி வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்புகள் ஒதுக்கீடு - விதிமுறைக்கு தளர்த்தி அரசு ஆணை வெளியிட்டது - தெளிவுரை வழங்கப்பட்டது - அரசாணை மற்றும் கடிதம் - அனுப்பி வைக்கப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை எண்.29 நாள் 22.1.2001.
2. வாரிய சுற்றறிக்கை குறிப்பாணை எண்.ஒ2(2) / 64332/2000, நாள்13.2.2001.
3. அரசு கடிதம் எண்.9431 / வீ.வா.4(1) / 2001-1, நாள்12.3.2001.

பார்வை ஒன்றில் குறிப்பிட்டுள்ள அரசாணையின் நகல் பார்வை இரண்டிலுள்ள குறிப்பாணையுடன் அனுப்பி வைக்கப்பட்டது (நகல் இணைக்கப்பட்டுள்ளது) அரசாணை எண்.29, நாள.23.3.2001 நடைமுறைக்கு வரும் நாள் குறித்து மூன்றிலுள்ள அரசு கடிதத்தில் தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது)

அரசு ஆணை மற்றும் அரசு கடிதத்தில் வழங்கப்பட்டுள்ள நெறிமுறைகளை கடைப்பிடித்து செயல்படுமாறு அனைத்து செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் / மேலாளர் (விற்பனை மற்றும் சேவை) அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஒம் /- ப. செந்தில்குமார்
மேலாண்மை இயக்குநருக்காக.

பெறுநர்

அனைத்து செயற் பொறியாளர் மற்றும் நிர்வாக் அலுவலர்,
'' மேலாளர் (விற்பனை மற்றும் சேவை)

நகல் பெறுநர்

அனைத்து மேற்பார்வை பொறியாளர்கள்
'' வாரியத் தலைமையக அலுவலர்கள்
ஒதுக்கீடு 1, 2 மற்றும் 3இன் பிரிவு அலுவலர்கள் / உதவியாளர்கள்.

// உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

Verified RealEstate

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

வீட்டு வசதி - தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு விற்கப்படாமல் உள்ள வீடுகள் /அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் மனைகளை விற்பதற்கு என விதிமுறைகளை தளர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீ.வா.4(2) துறை

அரசாணை (நிலை) எண்.29 நாள் : 29.1.2001

படிக்க:

அரசாணை (நிலை) எண்.427,வீட்டு வசதி மற்றும்
நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 18.1.2000.

ஆணை:-

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு விற்கப்படாமல் தேங்கியுள்ள வீடுகள் /அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீட்டு மனைகளை விரைவில் விற்பது குறித்து அமைச்சர் (வீட்டு வசதி) அவர்கள் தலைமையிலும், தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையிலும் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுக்களின் பரிந்துரைகளை அரசு கவனமாக ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணைகள் வெளியிடுகிறது.

1. வீட்டு வசதி வாரியத்தால் 30.6.2000-க்கு முன் கட்டி முடிக்கப்பட்டு 31.12.2000 அன்று வரை விற்பனை ஆகாமல் உள்ள வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு கட்டி முடிக்கப்பட்ட தேதியில் இருந்து அது விற்கப்படும் நாள் வரைக்கான வட்டி முதலாக்கம் செய்வதை நீக்கி திட்டம் முடிக்கப்பட்ட போது நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்கலாம்.

2. திட்டம் செயல்படுத்தப்பட்ட உடன் மனைகள் / வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவைகளை ஒதுக்கீடு செய்யும் போது முதல் முறையில் ஏற்கனவே உள்ள வாரிய விதிமுறைகளைப் பின்பற்றி குலுக்கல் நடத்தப்பட வேண்டும். அதன் பின், விற்கப்படாமல் உள்ள மனைகள் / வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்புகளை நடப்பில் உள்ள கீழ்க்கண்ட விதிமுறைகளை தளர்த்தி முதலில் வருவோர்க்கு முதலில் ஒதுக்கீடு என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

(அ) மனுதாரர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

(ஆ) மனுதாரர் 21 வயது நிரம்பியவராக இருக்கவேண்டும்.

(இ) ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனை / வீடு / அடுக்குமாடிக் குடியிருப்பு ஒதுக்கீடு செய்யக் கூடாது.

3. விற்பனைப் பத்திரம் பெறுவதற்கு வீட்டு வரி செலுத்திய இரசீது சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்படுகிறது.

Verified RealEstate™

4. அரசு பங்கீட்டின் கீழ் ஒதுக்கீடு பெற ஏற்கனவே உள்ள பிரிவுகளைத் தவிர பொது நிறுவனம், வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களில் பணிபுரிபவர்கள், மத்திய அரசு மற்றும் மத்திய அரசு சார்ந்த நிறுவனங்களில் பணி புரிபவர்கள், பத்திரிக்கையாளர்கள், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பணிபுரிபவர்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட ஈட்டுறுதி நிறுவனங்களில் பணி புரிபவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

5. வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டு விற்கப்படாமல் உள்ள வீடுகள் / குடியிருப்புகளை அரசு அலுவலர் குடியிருப்புகளாகவோ / காவலர் வீட்டு வசதி குடியிருப்புகளாகவோ தேவைப்படும் இடங்களில் மாற்றி ஒதுக்கீடு செய்யலாம், மற்றும்

6. வாரியக் கட்டமைப்புகளை குறைத்தும் தேவையற்ற பணியாளர் செலவுகள் மற்றும் மின் செலவுகளை குறைத்தும் வாரியக் கட்டுமானங்களின் விற்பனை விலையைக் குறைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. மேற்காணும் ஆணைகளின் அடிப்படையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய விதிமுறைகளுக்கு தகுந்த திருத்தங்களை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அஜெய் பட்டாச்சாரியா,
அரசு செயலாளர்.

பெறுநர்

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை - 35.
அமைச்சர் (வீட்டு வசதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை - 9.
தனிச் செயலாளர், முதலமைச்சரின் அலுவலகம், சென்னை - 9.
தனிச் செயலாளர், தலைமைச் செயலாளரின் அலுவலகம், சென்னை-9.
நிதித்துறை, சென்னை - 9.
உள்துறை, சென்னை-9.
பொது (கழுக்கம்) துறை, சென்னை-9.
செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, சென்னை - 9.
வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (பிரிவு 1 மற்றும் 5) துறை, சென்னை - 9.
உதிரிகள் / நகல்

// உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

உதவி செயலாளர்
(ஒதுக்கீடு)

VerifiedRealEstate

'உண்மை நகல்'

வீட்டு வசதி மற்றும்
நகர்ப்புற வளர்ச்சி துறை
தலைமை செயலகம்
சென்னை - 600 009.

கடித எண்.9431 / வீவா.4.1/2001-1 நாள் 12.3.2001

அனுப்புநர்

திரு.அஜெய் பட்டாச்சார்யா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
சென்னை - 600 035.

அய்யா,

பொருள் : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் - விற்கப்படாமல் உள்ள வீடுகள் விலை குறைப்பு செய்து விற்பனை செய்தல் - தெளிவுரை வெளியிடப்படுகிறது.

பார்வை :
1. அரசு ஆணை (நிலை) எண்.29, வீ.வ.ந.வ.து. நாள் 22.1.2001.
2. தங்களது கடித எண்.ஒதுக்கீடு 2.2 / 64332 / 2000, நாள் : 3.3.2001.

பார்வை இரண்டில் உள்ள தங்களது கடிதத்தில் கூறப்பட்ட சூழ்நிலையில் கீழ்க்கண்ட தெளிவுரை வழங்கப்படுகிறது என்று தெரிவிக்க பணிக்கப்பட்டுள்ளேன்.

"1.1.2001 முதல் 24.1.2001 வரை உட்பட்ட காலங்களில் ஆணைகள் வழங்கி ஒதுக்கீடு பெற்றவர்களுக்கு பார்வையில் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ள விலைக்குறைப்பு சலுகை பொருந்தும்".

தங்கள் உண்மையுள்ள
ஒம்/- ஜெயசூர்யசிர்ரா,
13.3.2001
அரசு செயலாளருக்காக

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

சுற்றறிக்கை குறிப்பாணை எண்.ஒதுக்கீடு 2(2) / 64332 / 2000

நாள் : 17.7.2001

பொருள் : ஒதுக்கீடு - ஒருங்கிணைப்பு - தனி வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்புகள் ஒதுக்கீடு - விதிமுறைகள் தளர்த்தி அரசு ஆணை வெளியிட்டது - தெளிவுரை வழங்கப்பட்டது - அரசாணை மற்றும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது - சம்மந்தமாக.

பார்வை : 1. அரசாணை எண்.29 நாள் 22.1.2001.
2. வாரிய சுற்றறிக்கை குறிப்பாணை எண்.ஒ2(2) / 64332 / 2000 நாள் 13.2.2001 மற்றும் 3.4.2001.

அரசாணை எண்.29, நாள் 22.1.2001 பத்தி 1இல் 30.6.2000 இல் முடிக்கப்பட்டு 31.12.2000 அன்று வரை விற்பனை ஆகாமல் உள்ள வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு கட்டி முடிக்கப்பட்ட தேதியில் இருந்து அது விற்கப்படும் நாள் வரைக்கான வட்டி முதலாக்கம் செய்வதை நீக்கி திட்டம் முடிக்கப்பட்ட போது நிர்ணயிக்கப்பட்ட விலைக்கே விற்கலாம் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை வாரியம் தனது தீர்மான எண்.9.03. நாள் 24.1.2001ல் ஒப்புதல் அளித்துள்ளது. இது பார்வை இரண்டில் எல்லா பிரிவுகளுக்கும் கோட்டங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

மேலாண்மை இயக்குநரின் (Review) ஆய்வுக் கூட்டம் 24.5.2001 மற்றும் 29.5.2001ல் நடைபெற்ற கூட்டத்தில் விற்கப்படாமல் உள்ள வீடுகளை 30.6.2001க்குள் விற்கப்பட வேண்டும் என்றும் 30.6.2001-க்கு பிறகு வட்டி முதலாக்கம் சலுகை தரப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட காரணத்தினால் சில கோட்டங்களிலிருந்து தொலைபேசி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் விலை குறைக்கப்பட்ட வீடுகளுக்கு 1.7.2001 முதல் வட்டி முதலாக்கம் செய்ய வேண்டுமா என கேட்கப்பட்டுள்ளது. அதற்கான விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

1. அரசாணை எண்.29, நாள் 22.1.2001ல் கூறியபடி விலை குறைக்கப்பட்ட திட்டங்களுக்கு அது விற்கப்படும் தேதி வரை வட்டி முதலாக்கம் செய்வதை நீக்கி திட்டம் முடிக்கப்பட்ட போது நிர்ணயிக்கப்பட்ட விலைக்கே விற்கலாம் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது அதையே பின்பற்றும்படி அறிவுறுத்தப்படுகிறது.

2. அரசாணை எண்.29, நாள் 22.1.2001ல் பத்தி இரண்டில் கூறப்பட்டது போல் முதல் முறையில் ஏற்கனவே உள்ள வாரிய விதிமுறைகளை பின்பற்றி குலுக்கல் நடத்தப்பட வேண்டும். அதன் பின் விற்கப்படாமல் உள்ள வீடுகள் / அடுக்குமாடி குடியிருப்புகளை "முதலில் வருவோர்க்கு முதலில் ஒதுக்கீடு" என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் உள்ளது. எனவே இனிவரும் காலங்களில் ஒவ்வொரு திட்டத்திற்கும் "முதலில் வருவோர்க்கு முதலில் ஒதுக்கீடு" என்பதை தனித்தனியாக உத்தரவுக்கு வாரியத்திற்கு எழுத தேவையில்லை என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒம் /- மு. நக்கீரன்,
மேலாண்மை இயக்குநருக்காக.

Verified RealEstate ™

பெறுநர்

அனைத்து செயற் பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர்
அனைத்து மேலாளர் (விற்பனை மற்றும் சேவை) கோட்டம் / பிரிவு.
அனைத்து வாரிய தலைமையக அலுவலர்கள் / பிரிவுகள்
ஒதுக்கீடு பிரிவுகள் 1, 2, 3-இன் பிரிவு அலுவலர்கள்.
கண்காணிப்பாளர் / உதவியாளர்கள்.
வாரியத் தலைமையக அறிவிப்பு பலகை.

// உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

Verified RealEstate ™

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

வீட்டுவசதி - தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - சீரமைப்பு - உயர்நிலைக்குழு அமைத்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

வீட்டுவசதி (ம)நகர்ப்புற வளர்ச்சி(வீ.வா.4(2))த்துறை

அரசாணை நிலை எண்.479. நாள்: 05.12.2001

படிக்க:

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் நேர்முக கடிதம் எண்.மே.இ.1/2001-1 நாள் 28.07.2001-1

ஆணை

தமிழ்நாடுவீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள் அரசுக்கு அனுப்பி வைத்த அறிக்கையின்படி கடந்த சில வருடங்களாக வீடு நில உடமைகள் சந்தையில் (Real Estate Market) மந்த நிலை காணப்படுகிறது. எனவே எதிர்பார்த்த அளவிற்கு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் வீடுகள்/மனைகள்/குடியிருப்புகள் விற்க இயலவில்லை. இதனைத் தொடர்ந்து ஒதுக்கீடு விதிகளைத் தளர்த்தியும் 30.06.2000க்கு முன்னர் கட்டி முடிக்கப்பட்டு 31.12.2000 வரை விற்பனை ஆகாத வீடுகளின் முதலீட்டு மதிப்பை (Capitalised Value) குறைத்தும் அரசு 22.01.01 நாளிட்ட (வீ.வ.(ம).ந.வ.) துறையில் அரசாணை நிலை எண்.29-இல் ஆணைகள் வெளியிட்ட பின்பும் மே 2001 முதல் விற்பனை மந்த நிலயில் உள்ளது. விற்பனைகளும் கணிசமான அளவிற்கு நடைபெறவில்லை.

2. இதனால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தான் வாங்கிய கடன்களுக்கு, பல்வேறு நிதி நிறுவனங்களுக்கு அசல் மற்றும் வட்டி செலுத்தும் வகையில் பெரும் சுமை ஏற்பட்டது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வசம் உள்ள வீடுகள்/குடியிருப்புகள் மதிப்பு ரூ.302 கோடியாகும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வசம் உள்ள வணிக மனைகள்/பொது உபயோக மனைகள் மதிப்பு ரூ.307 கோடியாகும். தற்போது, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செலுத்தும் வட்டி விகிதம் 15 விழுக்காட்டின் படி, விற்பனையாகாத வீடுகள் / குடியிருப்புகள் / மனைகளின் மீதான வட்டிச்சுமை ரூ.91 கோடி ஆகும்.

3. எனவே தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மனைகள்/வீடுகள்/குடியிருப்புகள் மற்ற வழிகளில் விற்பனை செய்வது குறித்து கண்டறியப்பட்டால் இதன் மூலம் வாரிய நிதி நிலைமை முன்னேறும் என்ற மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கருத்து தெரிவித்துள்ளார்.

4. மேற்கண்ட நிலையினை ஆய்வு செய்வதற்கு பின்வரும் உயர்நிலைக்குழு அமைக்கலாம் என தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

1.	மாண்புமிகு அமைச்சர் (வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை) அவர்கள்	.... தலைவர்
2.	அரசு செயலாளர் (வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை)	.... உறுப்பினர்
3.	அரசு செயலாளர் நிதித்துறை (அ) அவரது பிரதிநிதி	.... உறுப்பினர்
4.	மண்டல தலைவர், ஹட்கோ	.... உறுப்பினர்
5.	துறை மாநில கணக்காய்வுத் தலைவர் (மாநில கணக்காய்வுத் தலைவரால் நியமிக்கப்படவேண்டும்)	.... உறுப்பினர்

Verified RealEstate™

5. இக்குழுவிற்கு பின்வரும் ஆய்வு எல்லையை (Terms of Reference) நிர்ணயம் செய்யலாம் என தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

1. விற்பனையாகாத மனைகள்/வீடுகள்/குடியிருப்புகள் விற்பனை செய்வதற்கான வழிமுறைகள் குறித்து ஆலோசனை வழங்குதல்
2. விற்பனையாகாத மனைகள்/வீடுகள்/குடியிருப்புகள் விரைவில் விற்பனை செய்வதற்கு சலுகை அளிப்பது குறித்து ஆலோசனை வழங்குதல்.
3. வீடுகள் / குடியிருப்புகள்/மனைகள் விற்பனை செய்வதற்கு சந்தை உத்திகள் (Marketing Strategy) குறித்து அறிவுரைகள் வழங்குதல்.
4. வீட்டு வசதி வாரியத்தின் "விலை நிர்ணயக் கொள்கை"(Pricing Policy) குறித்து ஆய்வு செய்து தேவைப்படின் அதனை மாறுதல் செய்ய ஆலோசனைகள் வழங்குதல்.

6. அரசு, ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தை சீரமைப்பது குறித்து ஆய்வு செய்வதற்கு பின்வரும் உயர்நிலை குழுவை அமைத்து ஆணையிடுகின்றது.

1.	மாண்புமிகு அமைச்சர் (வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சி)	... தலைவர்
2.	அரசு தலைமைச் செயலாளர்	... துணைத் தலைவர்
3.	அரசு செயலாளர் (வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை)	... உறுப்பினர்
4.	அரசு செயலாளர், நிதித்துறை (அல்லது) அவரது பிரதிநிதி	... உறுப்பினர்
5.	மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்	... உறுப்பினர்
6.	மண்டல தலைவர், ஹட்கோ	.... உறுப்பினர்
7.	துணை மாநில கணக்காய்வுத் தலைவர் (மாநில கணக்காய்வுத் தலைவரால் நியமிக்கப்பட வேண்டும்)	.... உறுப்பினர்

மேலும் இந்த உயர்நிலைக் குழுவிற்கு மேலே பத்தி 5ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆய்வு எல்லையை (Terms of reference) நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அ. நாகராசன்
அரசுச் செயலாளர்

பெறுநர்

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை -35.
அமைச்சர் (வீ.வ. (ம) ந.க.) அவர்களின் நேர்முக முதுநிலை உதவியாளர்
அரசு தலைமைச் செயலாளர்
தலைமைச் செயலகம், சென்னை - 9.

Verified RealEstate™

அரசு செயலாளர்
வீட்டுவசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை, சென்னை – 9.

அரசு செயலாளர்
நிதித்துறை, சென்னை 9.

துணை மாநிலக் கணக்காய்வுத் தலைவர்
(மாநில கணக்காய்வுத் தலைவர் அவர்கள் வழியாக), சென்னை - 18.

மண்டல தலைவர், ஹட்கோ
சென்னை (தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வழியாக)
வீ.வ.(ம)ந.வ.(வீ.வ.(5) துறை, சென்னை - 9.

நகல்: முதலமைச்சர் அலுவலகம்,
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

Verified RealEstate™

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

வீட்டுவசதி - தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - விற்பனையாகாத மனைகள், வீடுகள் (குடியிருப்புகள்) ஆய்வு - உயர்நிலை குழு-நிலை குழுவாக செயல்படுதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீ.வ.4(2) துறை

அரசாணை (நிலை) எண். 207 நாள்: 14.08.2002

படிக்கவும்:

1. அரசாணை(2டி) எண்.479, நாள் 05.12.2001
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கடித எண். ஒதுக்கீடு ஒதுக்கீடு2(2)/72020/01 நாள் 09.04.2002

ஆணை

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் விற்பனையாகாத மனைகள்/வீடுகள்/ குடியிருப்புகள் ஆகியவற்றை விற்பனை செய்வது குறித்து ஆய்வு செய்ய, பின்வரும் உயர்மட்ட குழு ஒன்று அரசு ஆணை எண்.479, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, நாள் 05.12.2001-ல் அமைக்கப்பட்டது.

1.	மாண்புமிகு அமைச்சர் (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி)	தலைவர்
2.	அரசுத் தலைமைச் செயலாளர்	துணைத் தலைவர்
3.	அரசு செயலாளர் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை	உறுப்பினர்
4.	அரசு செயலாளர், நிதித்துறை (அல்லது அவரது பிரதிநிதி)	உறுப்பினர்
5.	மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்	உறுப்பினர்
6.	மண்டல தலைவர், ஹட்கோ	உறுப்பினர்
7.	துணை மாநில கணக்காய்வுத் தலைவர் - (மாநில கணக்காய்வுத் தலைவரால் நியமிக்கப்பட வேண்டும்)	உறுப்பினர்

3. இக்குழுவிற்கு பின்வரும் ஆய்வு எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது
   (1) விற்பனையாகாத மனைகள்/வீடுகள்/குடியிருப்புகள் விற்பனை செய்வதற்கான வழிமுறைகள் குறித்து ஆலோசனை வழங்குதல்.
   (2) விற்பனையாகாத மனைகள்/வீடுகள்/குடியிருப்புகள் விரைவில் விற்பனை செய்வதற்கு சலுகை அளிப்பது குறித்து ஆலோசனை வழங்குதல்
   (3) வீடுகள்/குடியிருப்புகள்/மனைகள் விற்பனை செய்வதற்கு சந்தை உத்திகள் (Marketing Stragegy) குறித்து அறிவுரைகள் வழங்குதல்.
   (4) வீட்டு வசதி வாரியத்தின் விலை நிர்ணயக்கொள்கை (Pricing Policy) குறித்து ஆய்வு செய்து தேவைப்படின் அதனை மாறுதல் செய்ய ஆலோசனைகள் வழங்குதல்.

Verified PeelEstate ™

4. தற்போது தமிழ்நாடு வீட்டவசதி வாரியம், மேலாண்மை இயக்குநர் தனது கடிதத்தில் 14.12.2001 அன்று மாண்புமிகு அமைச்சர் (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி) அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்காணும் உயர்நிலைக்குழுவின் கூட்டத்தில் அவ்வப்போது எழும் பொருள்கள் (Issyues) குறித்து முடிவு செய்வதற்கு இந்த உயர்நிலைக்குழுவானது (High Level Committee) நிலைக்குழுவாக (Standing Committee) செயல்படலாம் என தீர்மானிக்கப்பட்டது எனத் தெரிவித்தது. இது குறித்து அரசின் ஆணையை வேண்டியுள்ளார்.

5. அரசு ஆழ்ந்த பரிசீலனைக்குப்பின் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் கோரிக்கையை ஏற்று அரசாணை எண்.479, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 05.12.2001ல் ஏற்படுத்தப்பட்ட உயர்நிலைக்குழுவானது (High Level Committee) நிலைக்குழுவாக (Standing Committee) செயல்பட அனுமதி அளித்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

லால் ராணா சைலோ,
அரசு செயலாளர்

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை - 35.
அமைச்சர் (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி) அவர்களின் நேர்முக உதவியாளர்
சென்னை- 9.

தலைமைச் செயலாளர், சென்னை - 9.
அரசு செயலாளர், நிதித்துறை, சென்னை - 9.
துணை மாநில கணக்காய்வுத் தலைவர் (மாநிலக் கணக்காய்வுத் தலைவர் அவர்கள் வழியாக), சென்னை - 18.
மண்டல தலைவர், ஹட்கோ, சென்னை (தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வழியாக)
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (வீ.வ.5) துறை, சென்னை - 9.

நகல்

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை - 9.
இ.கோ./உதிரி

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

Verified RealEstate

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

குறிப்பாணை எண்.ஒது.2(5) / 2297 / 2002 நாள் : 20.2.2002

பொருள் : தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் - ஒதுக்கீடு தமிழ்நாடு சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சி 2002 - பொருட்காட்சி மையத்தில் ஒதுக்கீடு பெற மனு செய்து ஒதுக்கீடு பெற்றால் சிறப்புச் சலுகை வழங்குதல்- அரசாணை பெறப்பட்டது - சம்மந்தமாக.

பார்வை : அரசாணை (நிலை) எண்.51 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி 4(1) துறை, நாள் 19.2.02.

பார்வையிலுள்ள அரசாணையின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பொங்கல் 2002 சிறப்பு சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் அமைந்துள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடத்தில் மனைகள் / வீடுகள் / குடியிருப்புகள் ஒதுக்கீடு பெற விண்ணப்பம் செய்து ரூ.5000/- டேவினித் தொகை (ஈ.எம்.டி) செலுத்தியும் 15 நாளில் முன் வைப்புத் தொகை / முழுத்தொகை செலுத்துவோர்க்கு பொங்கல் சிறப்பு சலுகையாக செலுத்தும் தொகையில் 1% தள்ளுபடி செய்யலாம் என்றும்,இச்சலுகை பொங்கல் பொருட்காட்சி முடியும் வரை அமுலில் இருக்கவும் வாரியம் ஒப்புதல் அளித்து இச்சலுகை கலர் டி.வி., பிரிட்ஜ் வழங்கப்படும் திட்டங்களுக்கு பொருந்தாது" என்றும் அனுப்பப்பட்ட பிரேரணைக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதனை உங்கள் கவனத்திற்கு கொணர விழைகிறேன்.

ஒம்/ எஸ்.சிவசண்முகராஜா
மேலாண்மை இயக்குநருக்காக.

இணைப்பு : அரசாணை நகல்

பெறுநர்

அனைத்து கோட்ட / பிரிவு
செயற்பொறியாளர் /
மேலாளர் - விற்பனை மற்றும் சேவை

நகல் : 1. செயற்பொறியாளர் / விற்பனை குழு (பொறுப்பு)
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை - 35.

2. அனைத்து சரக மேற்பார்வை பொறியாளர்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

கண்காணிப்பாளர்.

Verified RealEstate™

சுருக்கம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் – ஒதுக்கீடு – வாரியத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகள் / குடியிருப்புகள் / வீடுகள் – தமிழ்நாடு சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி – 2002 – பொருட்காட்சி மைத்தில் ஒதுக்கீடு பெற மனு செய்து ஒதுக்கீடு பெற்றால் சிறப்புச் சலுகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி / (வீ.வ.4(1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.51 நாள் : 19.2.2002

படிக்கப்பட்டது:

1. தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் கடித எண்.ஒது.2(5) / 2297 / 2002, நாள் 13.02.2002.

ஆணை:–

ஆண்டுதோறும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால், சென்னைத் தீவுத்திடலில் நடத்தப்படும் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஒவ்வொரு ஆண்டும் பங்கு பெற்று காட்சி அரங்கு அமைத்து வருகிறது. இந்த ஆண்டும் அவ்வாறு அமைக்கப்படும் போது, தற்போது விற்பனையாகாமல் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அபிவிருத்தி செய்யப்பட்ட மனை / அடுக்கு மாடிக் குடியிருப்புகள் / வீடுகள் விற்பனையை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி 2002ல் பொருட்காட்சி மையத்தில் ஒதுக்கீடு பெற மனு செய்த ஒதுக்கீடு பெற்றால் சிறப்பு சலுகை வழங்குவது குறித்து கீழ்க்காணும் செயற்குறிப்பு வாரிய கூட்டத்தில் வைக்கப்பட்டு, அதனை வாரியம் தனது தீர்மானம் எண்.9.04 நாள் 28.01.2002ல் ஏற்று கொண்ட நிலையில், அத்தீர்மானத்தை அரசுக்கு மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், பரிந்துரைத்துள்ளார்.

"பொங்கல் 2002 சிறப்பு சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் அமைந்துள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடத்தில், மனைகள் / வீடுகள் / குடியிருப்புகள் ஒதுக்கீடு பெற விண்ணப்பம் செய்து, ரூ.5,000/– டேவணித் தொகை (ஈ.எம்.டி.) செலுத்தியும் 15 நாளில் முன் வைப்புத் தொகை / முழுத்தொகை செலுத்துவோர்க்கு பொங்கலை சிறப்புச் சலுகையாக செலுத்தும் தொகையில் 1% தள்ளுபடி செய்யலாம் எனவும், இச்சலுகை பொங்கல் 2002 பொருட்காட்சி முடியும் வரை அமுலில் இருக்கவும் வாரியம் ஒப்புதல் அளித்தது". இச்சலுகை கலர் டி.வி., ஃபிரிட்ஜ் வழங்கப்படும் திட்டங்களுக்குப் பொருந்தாது என்று மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலே பத்தி 1ல் குறிப்பிட்டுள்ள வாரியத்தின் தீர்மானத்தை, மேலாண்மை இயக்குநர் பரிந்துரைத்தவாறு ஏற்பது குறித்து அரசு ஆராய்ந்து, அவர் பரிந்துரையை ஏற்கலாம் என்று முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அ.நாகராசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
நந்தனம், சென்னை - 35.

நகல் :

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

அரசு செயரின் தனி செயலர்
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

நிதித் துறை, சென்னை - 600 009.
எஸ்சி / எஸ்எப். (2 நகல்கள்)

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஒம் /- ஐய்.சூர்யசித்ரா
பிரிவு அலுவலர்.

// உண்மை நகல் //

கண்காணிப்பாளர்

Verified RealEstate™

CIRCULAR No.I-1/492/88 dated 01.10.89

Sub : TNHB - Pricing of House sites, Commercial sites - Adoption of extra levy - Regarding.

The Board in Resolution No.16 dated 28.7.89 resolved to adopt the following guideline in pricing the land in future.

{PRIVATE}	CATEGORY	PROPOSED PRICING POLICY
A.	**RESIDENTIAL SITES**	
1.	Plots located in 80' Road and above.	35% over and above the ruling rate.
2.	Plots located in 60' Road.	25% over and above the ruling rate.
3.	Plots located in 20', 30', 40' Road	Ruling rate, fixed every year.
4.	For Corner Plots irrespective of Road width.	10% over and above the normal ruling rate per ground.

COMMERCIAL SITES

Plots earmarked for Commercial. (Sale to Public)

a.	Located in 80' Road & above :	To be allotted in auction only fixing the upset price at 100% over and above the ruling rate.
